1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 20-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு வைகாசிமாதம் 29-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## வேதசாட்சியின் புன்முறுவல்

அப்போது ஸ்பானியதேசத்திலே ஒருபக்கத்தில் ஜெனறல் பிறங்கோஅவர்களைத் தலைமையாகக்கொண்ட தேசியக்கட்சியினருக்கும், மறுபக்கத்தில் பொதுவுடைமைக் கட்சியினருக்குமிடையே மும்முரமாக உள்நாட்டுயுத்தம் நிகழ்ந்துகொண்டிருந்தது. தேசியக்கட்சியினர் கிறீஸ்தவ தர்மக்கொள்கைகளை நிலைநாட்டக் கங்கணங்கட்டிநின்றார்கள். பொதுவுடைமைக்கட்சியினர் நாஸ்திகப் பொதுவுடைமைக்கொள்கைகளைப் பரவச்செய்யமுயன்றார்கள். மெய்யான நாகரீகத்தையும், அதற்கு அடிப்படையாக விருந்துவரும் கிறீஸ்துவேதத்தையும் தொலைத்துவிடச்சபதங்கூறிக்கலகம் ஆரம்பித்தனர் நாஸ்திகர்கள். கோவில்களை இடித்துத் தகர்த்தார்கள். பல்லாயிரங் குருமாரைக் கொலைசெய்தார்கள். அவர்கள் கையில் அகப்பட்டு மாண்ட கன்னியர்கள் அனந்தம். மனந்தளராது விசுவாசத்திற்காக உயிரையிழந்த கிறீஸ்தவர்கள் அனந்தம். இப்படி மரணமடைந்த குருப்பிரசாதிகளில் ஒருவர் லாத் எனுஞ் சிரேஷ்டசுவாமியார்.

வண. லாத்சுவாமியார் புத்தியில் சிறந்தவர். பக்தியில் முதிர்ந்தவர். ஆத்தும இரட்சணிய அலுவலில் தணியாத ஆவல் கொண்டவர். மானிடர் நல்வழிசெல்ல அமிர்தபிரசங்கங்கள் பண்ணிவந்தவர். பொதுத்தியானங்களும் உள்தியானங்களும் கொடுப்பதில் பேர்பெற்றிருந்தவர். சனங்களுக்கும் இவர்மாட்டுப் பற்றுதலும், மரியாதையும் அபரிமிதமாயிருந்தன. அவரது வார்த்தைகளை அவர்களும் மறுக்காது கேட்டுநடந்தார்கள். கத்தோலிக்கர் அவர்மீது அளவிலாப்பிரீதி வைத்திருந்தமையால் அவரைத் தொலைத்துவிடவேண்டுமென்று தீர்மானித்தார்கள் நாஸ்திகர்கள். ஸ்பானியாவில் யுத்தம்ஆரம்பமாகி வெகுநாளாகவில்லை. ஒருநாள் பொதுவுடமைப் போர்வீரர்சிலர் வண. லாத் சுவாமிகளிடம்போய் அவரைவெளியே இழுத்துவந்து கொலைசெய்ய முஸ்திப்புச்செய்தார்கள்.

வயோதிகதேசிகர் தாம் கொலைக்குள்ளாகப் போவதையறிந்து புன்முறுவலுற்று மனோதிருப்தியாகவும், சந்தோஷமாகவும் யேசுவுக்காகத் தம்முயிரைப் பலியாகக்கொடுக்கத் தயாராய் இருப்பதாகக் காட்டினார். இதைக்கண்ட கொலைஞர்கள் ஆச்சரியமுற்றனர். அசைவற்று நின்றனர். அவர்களில் ஒருவன் "என்ன! சாகிறது உமக்குப் பயத்தை மூட்டவில்லையோ?" என வினவினான். "பரிச்சேதமில்லை; இப்பேர்ப்பட்ட மரணத்திற்காகவே யான் என்றும் மன்றாடிவந்தேன்" எனப் பதிலிறுத்தார் சுவாமியார். இதைக்கேட்டு அவர்கள் இன்னுமதிகமாக ஆச்சரியப்பட்டார்கள். ஆச்சரியமுறுவதைக் கண்ட குருவானவர், தமது கருத்தை விபரமாகத் தெரிவிக்குமாறு கொஞ்சநேரங் கொடுக்கும்படிகேட்க, அதற்கு அவர்களும் சம்மதித்தனர்.

"என் சீவியகால முழுவதும் மூன்றுகாரியங்களுக்காக நான் மன்றாடிவந்தேன். அவைகளில் ஒன்று எனது ஆத்தும இரட்சணியம். அதுவே மனிதனின் முதன்மையான அலுவல். இப்போது நான் யேசுவுக்காக உயிரைக் கொடுக்கப்போவதால் என் இரட்சணியம் நிச்சயமாயிற்று. மோட்சகபாடம் எனக்குமுன் திறக்கப்படுமென்பதில் கிஞ்சித்தேனுஞ் சந்தேகமில்லை" எனப் பகர்ந்தார் குருவானவர். "நான் கடவுளிடம் இருந்துகேட்ட இரண்டாவது மன்றாட்டு என்னவென்றால், நான் யேசுவுக்காக வேதசாட்சியாக என்னுயிரைத் தானஞ்செய்யவேண்டுமென்பதே. அத்தகையமரணமே நான் அண்மையிலடையப் போவதாகத் தெரிகிறது. ஏனெனில், நான் ஒரு குருவாகவிருந்து யேசுவுக்காக உழைத்துவருவதினால், என்னைக் கொலைசெய்யப் போகிறதாக உங்களுடைய பேச்சில் தெரியக்கிடக்கின்றது. ஆகையால் நான்கேட்ட இரண்டாவது மன்றாட்டும் பலித்துவிடும்" என்று தொடர்ந்து சொன்னார்.

"நான் கேட்ட மூன்றாவது மன்றாட்டு எனக்குக்கிடைக்குமோவென்று உறுதியாகச் சொல்ல எனக்குத்துணிவில்லை. ஆயினும் கடவுள் கருணையுள்ள

(தொடர்ச்சி [illegible]-ம் பக்கம்)

## அடுத்த ஜனாதிபதி யார்?

அமெரிக்கஜனாதிபதி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுபவர். அமெரிக்க கட்சிகளில் இருபெருங்கட்சிகளான (Democrats) ஜனநாயக கட்சி, (Republicans) குடியரசுக் கட்சிஆகிய இவ்விரண்டில் ஒன்றின் ஆதரவில்லாமல் எவரும் ஜனாதிபதித்தேர்தலில் வெற்றி பெறமுடியாத. பொதுப்படக் குடியரசுக்கட்சி வலதுசாரிக் கட்சி, ஜனநாயகக்கட்சி இடதுசாரிக்கட்சிஎனலாம். இடதுசாரியெனில், அமெரிக்க ஜனநாயகக்கட்சியினர் ஆங்கில கன்ஸர்வற்றிவ் கட்சியினரின் போக்கைவிட மிதவாதிகளென்று கூறவேண்டும். இருபதாண்டுகளுக்குமுன் றூஸ்வெல்ற் ஜனாதிபதியானதும் நாடு முழுவதும் வியாபாரமந்தத்தால் பீடிக்கப்பட்டிருந்ததைக் கண்டு 'புதுத்திட்டம்' (New Deal) என்றபெயரால் சிலசட்டங்களை இயற்றிக் கூலிஉயர்வு, விலைநிர்ணயம், முன்னேற்றமில்லாத பிரதேசங்களின் அபிவிருத்தி ஆதியமுயற்சிகளால் நாட்டின் பொருளாதாரத்துக்குப் புத்துயிரளித்தார். பெரியமுதலாளிகளின் எதிர்ப்பு, நீதிபதிகளின் முட்டுக்கட்டை இவைகளையெல்லாம் மேற்கொண்டார். இவராலேயே ஜனநாயகக்கட்சி புதுஊக்கத்தையும், புதுநோக்கங்களையும் கண்டடைந்தது.

### ட்றூமனின் சகாப்தம்

றூஸ்வெல்ற் நான்காம்முறையாகப் பதவிபெற்ற மூன்றே மாதங்களில் தேகவியோகமானபடியால் உபதலைவராயிருந்த ட்றூமன் அதிர்ஷ்டவசமாகத் தலைவர்பதவியைப் பெற்றார். "மிசவ்றியின் குள்ளர்" என்ற பட்டப்பெயர் பெற்றிருந்த இவரைப்பற்றி யாரும் அதிகமறியார்கள். ஆனால் ட்றூமன் நாளடைவில் தமது நிர்வாகத் திறமையை உலகம் வியக்கும் வண்ணம் காட்டினார். ஜேர்மனிய, ஜப்பானியயுத்தங்களைத் திறம்படமுடித்தார். ஆனால், இரண்டுபெருந்தவறுகள் நிகழ்ந்தன: சீனாவிலே ஷியாங்-கை-ஷெக் அரசாங்கத்தைக் கைவிட்டதுஒன்று. அமெரிக்க படைப்பலத்தைக்குறைத்து ரூஷியர்களின்வளர்ச்சிக்கு வழிகொடுத்தது இரண்டாவது.

### கைகலவாப் போர்

ஆனால், 1948-ம் ஆண்டு ஆச்சரியகரமாக அவர் இரண்டாம் முறையும் பதவிபெற்றார். 'நியாயமுறை' (Fair Deal)என்ற விருதுவாக்கை உலகறியப் பறையறைந்தார். ரூஷியர்களின் கொட்டத்தையடக்க மாஷல்திட்டத்தை உருவாக்கினார். பேர்ளின்நகரிலே ரூஷியரின் சண்டித்தனத்தை மேற்கொண்டார். இரும்புத்திரை மேற்குநோக்கி முன்னேறாதபடி தடுத்தார். ஐரோப்பியசமுதாயத்தை உருவாக்கினார். இன்று ஐரோப்பா கம்யூனிஸமயமாகத் தோற்றமளிக்காததற்குக் காரணம் ட்றூமன்என்றால் மிகையாகாது. இல்லையேல் ஒன்றில் கைகலவாப்போர் மெய்ப்போராகமாறியிருக்கும், அல்லது போரின்றியே ரூஷியசாம்பிராச்சியம் பிரான்சைமுதலாக விழுங்கியிருக்கும். இதேபிரகாரம் "நான்காம் அம்சம்" (Point Four) மூலமாகக் கீழ்த்திசைநாடுகளின் பொருளாதாரமுன்னேற்றத்துக்காக ஏற்பாடுசெய்துள்ளார். இப்பொழுது இரு திட்டங்களும் பரஸ்பரபாதுகாப்பு என்றபெயரால் நடைபெறுகின்றன. 1950-ம் ஆண்டு கோறியஆக்கிரமிப்பு நிகழ்ந்தது. மீண்டும் 'மிசவ்றிக் குள்ளர்' சந்தர்ப்பத்துக்கு வேண்டியவாறு தம்விஸ்வரூபத்தைக் காட்டினார். ஒருபுறம் மைக்ஆர்தர்போன்ற போர்வெறிபிடித்தவர்களை அமர்த்தவேண்டும். இன்னொருபுறம் (Taft) ராவ்ற்போன்ற கிணற்றுத் தவளைகளின் பிடிவாதத்தை மேற்கொள்ளவேண்டும். போர் பரவாமல் இன்றுவரை தடுத்துவந்தது ட்றூமனின் மகத்தான சாதனை. உள்நாட்டிலும் இதே சங்கடமான நிலைமை (Wallace) வலஸ்போன்ற ஜனநாயகக்கட்சிப் பிரமுகர்கள் தமதுபோக்கில் சிவப்பில்லையேனும் ரோஸ்கலரென்று கூறும்வண்ணம் கம்யூனிஸத்தில் அநுதாபிகளாக நடந்துகொண்டனர். இன்னொருபுறம் கம்யூனிஸமென்றால் சிவப்புக்கொடியைக் கண்ட காளைபோலமிரண்டு தம் நிதானத்தையிழந்த அமெரிக்கர்கள்பலர். ஹிஸ்போன்ற கம்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநாடகம்

# ஓர் மறுமலர்ச்சி

### காட்சி 1

இடம்: வகுப்பறை. நேரம்: காலை 8 மணி. வண. பிரகாசம்சுவாமியார் ஞானோபதேசம் படிப்பித்துக்கொண்டிருக்கிருர். \ அத்துடன் "கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே" என்பது பற்றி ஒருசிறுபிரசங்கமும் செய்கிருர்.

**சுவாமியார்** — பிள்ளைகளே! உலக சீவியத்தில் துன்பங்கள், கஸ்திகள், துயரங்களுக்குத் தப்பிக்கொண்டவர்கள் யார்? அவைகளைப்பற்றி அறியாதவர்கள் யார்? மனிதசமுதாயத்தில் எத்தனைவிதமானமனிதர் இருக்கின்றனர்! மச்சுவீட்டில் சிலர், குச்சுவீட்டில்பலர், உழைப்போர், சோம்பித்திரிவோர், பாபிகள், கோபிகள், லோபிகள், இன்னுப் எத்தனையோ தரப்பட்டவர்கள் இருக்கின்றனர். சுருங்கக்கூறில் நல்லவர்—கெட்டவர்என இருசாரார் இருக்கின்றனர் இப்பிரபஞ்சத்தில். ஆனுல், ஒருவிஷயத்தில மாத்திரம் எல்லோரும் சமம். அது, எல்லோரும் ஒருவிததுன்பத்தை அனுபவிப்பதுதான். "எல்லோருக்கும் விதனம் ஒன்றே." பொதுமனிதன் தன்சரீரத்தில் வேதனைப்படுகிருன். அது போன்றே ஆத்துமத்திலும் அவன் அவஸ்தையுறுகிருன். அவனுக்கு இந்தவேளை அவசரமாகவும், அவசியமானதும் கொடுப்பதுயார்? ஊக்கமும் உற்சாகமும் ஊட்டுவதுயார்? "கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே" என்று நாம்அழைக்கும் அந்தஅன்புத்தாயார் அல்லவா? இதனை நீங்கள் ஒருபோதும் மறவாதீர்கள். பிள்ளை தாயைமறப்பது நீதியா? உங்களுக்கும் இக்கட்டுஇடைஞ்சல்கள் வரும். மன்ருடுங்கள், மாதாவிடம் நல்மனதுடன். உங்கள்மன்ருட்டு ஒருபோதும் வீண்போகாது.

[இவ்வேளை அடைக்கலம் தான் கேள்வி கேட்கப் போவதாகச் சமிக்கை செய்கிருன்.]

**சுவாமி.** — என்ன அடைக்கலம்?

**அடைக்.** — சுவாமி! நான்மிகவும் அபாக்கியன். மாதாவிடம் எனக்கு வேண்டியதைக் கேட்க அஞ்சுகிறேன்.

**சுவாமி.** — "நீ ஆண்டவரிடம் போகச் சிலசமயங்களில் பயப்படலாம். ஆனுல், நீ தேவமாதாவிடம் பயமில்லாமல் போகலாம்" என்று அர்ச். பேணுட் சொல்லுகிருர்.

**அடைக்.** — நான் பெரிய நிர்ப்பாக்கியன் சுவாமி! தேவதாயாரைநோக்கி மன்ருட எனக்கு மனத்தைரியமோ இல்லை. நான் நெடுங்காலமாய் மன்ருடிவருகிறேன். ஆனுல், இன்னும் ஒருபலனையும் நான் அடையவில்லை. சகலநம்பிக்கையையும் நான் இழந்துவிட்டேன்.

**சுவாமி.**:— அப்படிச்சொல்லாதே. அன்னையின்பேரில் நீ அவநம்பிக்கை கொள்ளாதே. அவள்தான் அவநம்பிக்கைப்படுவோரின் திடநம்பிக்கை. விடாப்பிடியாக, கடைப்பிடியுடன் மன்ருடிவா. நீ மன்ருடாதுவிட எண்ணும்நேரந்தான் உன் மன்ருட்டுக் கேட்கப்படும் நேரமாகலாம். ஆகவே, நீ இன்னும நம்பிக்கைஉள்ளவனுய் இரு. அவசரப்படாதே!

**அடைக்.**:— ஆம்சுவாமி! நல்லது. அப்படியேசெய்கிறேன்.

### காட்சி 2

இடம்: அடைக்கலத்தின் அறை. நேரம்: மாலை 4 மணி. மனக்குழப்பத்துடன் நாற்காலியில் அமர்ந்திருக்கிருன். அவன்அருகில் ஓர்ஊன்றுகோல். இடதுகால் ஊனம். தேவமாதா சுரூபத்தைப்பார்ப்பதும், ஏதோ எண்ணுவதுமாகஇருந்துவிட்டு, ஊன்றுகோலால் நடந்து அச்சுரூபத்தை நெருங்கி ஆவேசத்துடன்:

**அடைக்.** — உன்னை என் அன்னை என்று நம்பினேன்! அதற்குப் பிரதிபலன் இதுவா! நான்உனக்கு என்ன துரோகம் செய்தேன்! தாய் சேய்க்குச்செய்யும் உதவிஇதுவா? நொண்டி என்று பெயர்வாங்கி விட்டேனே. குருவானவரும் உன்னில் நம்பிக்கை வை என்ருரே! தாய்! தாய்!! நீயா எனக்குத்தாய்? இல்லை! ஒருபோதுமில்லை! நீஎனக்குத்தாயுமல்ல, நான் உனக்குச் சேயுமல்ல. இதோ! பழி வாங்குகிறேன்.

[என்றுசொல்லிச் சுரூபத்தைத் தரையில்எறிந்துஉடைக்க முற்படும்பொழுது "அடைக்கலம்" என்று அழைக்கிறது ஒரு குரல். அது பிரகாசம்சுவாமியுடையதுதான்.]

**அடைக்.** — சுவாமி!

**சுவாமி.** — என்னகாரியம் செய்யத்துணிந்தாய்? என்ன உனக்கு.........!

**அடைக்.** — (நடுங்கும் கைகளால் சுரூபத்தை அதன் இருப்பிடத்தில் வைத்துவிட்டு) சுவாமி! என்னைமன்னிக்கவேண்டும். நீங்கள் போதித்தவாறே நான்சாதித்துவந்தேன். ஆனுல் சென்றமாதத்திலிருந்து என் மனம் மாறிவிட்டது. கால்பந்துப்போட்டிக்குப் போகுமுன் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டேன். எங்கள்கட்சி ஜெயம்பெற வேண்டுமென்று. ஆனுல், அதற்குப் பதிலாக நான்நொண்டியானேன். இது தேவதாயின் சோதனை என்று பொறுமையாயிருந்தேன். தெருவில் உள்ள சிறுவர்கள் என்னைப்பார்த்து

**எல். அருளானந்தம்**

"நொண்டி, நொண்டி" என்று நையாண்டிசெய்தார்கள். அப்போதுதான் நான் என்பொறுமையை இழந்தேன். இந்தப்பாவச்செயலைச் செய்யத்துணிந்தேன். நல்லவேளையாய் நீங்கள் கடவுளுடைய சம்மனசுஒன்று வந்ததுபோல்வந்து என்னை இப்பாவச்செயலில்நின்று காப்பாற்றிவிட்டீர்கள். சுவாமி! உங்களுக்குக் கோடிபுண்ணியம்; என்னை மன்னித்துவிடுங்கள்.

[அழுதவாருய் இதைக் கூறுகிருன்.]

**சுவாமி.** — நல்லகாரணம் காட்டுகிருய் அடைக்கலம். அதற்காக இந்தச்சுரூபத்தை (அதைச் சுட்டிக் காட்டி) உடைத்துவிட்டால் உன்கால் சரியாகிவிடுமா? எப்பொழுதாவது உன் தாய் ஒருஉதவி புரியவில்லைஎன்று அடித்திருப்பாயா? யார்தான் அப்படிச்செய்வார்கள்? நீ செய்தகிரிகை அதுபோன்றுதான் இருக்கிறது. பக்திமான்களையும், புத்தியுள்ளவர்களையும் தேவன் சோதிப்பார்என்பதை நீ அறியமாட்டாயா? இந்தக்காலுக்காக — வெகுசீக்கிரத்தில் சுகமாகப்போகும் இந்தக்காலுக்காக உன் ஆத்துமத்தையே அழிக்கப்போனுயே. உனக்குத் தேவஅன்னை ஏதாவதுஒருபுதுமை காட்டினுல்தான் நம்புவாய் போல் இருக்கிறது. நீமட்டும் — ஏன் உன்னைப்போல் எத்தனையோமூடநம்பிக்கை கொண்டவர்கள் அதைத்தான் எதிர்பார்க்கிருர்கள். சரி! இனியாவது நீ புத்தியாய் இருப்பதுமட்டும் போதாது. தேவஅன்னையின் மகிமையைப்பற்றி உன்னைப்போன்று அவநம்பிக்கைஉள்ளவர்களிடம் உறுதிமொழி கூறு. நல்லபையன்என்று பெயர் வாங்கு. தெரிந்ததா?

**அடைக்.** — நீங்கள்எனக்குப் புத்துயிர் அளித்துவிட்டீர்கள். என து இருதயத்திலே ஒருமறுமலர்ச்சியை உண்டுபண்ணிவிட்டீர்கள். சுவாமி என்னை ஆசீர்வதியுங்கள், என்னை ஆசீர்வதியுங்கள். நீங்கள் இவ்விடம் எதிர்பாராதவிதமாய் வந்ததும் மாதாசெய்த புதுமைதான்.

சுவாமியார் ஆசீர்வதித்துவிட்டு மறைகிருர்.

[ திரை ]

## சுதேச வர்த்தமானம்

### வணக்கமாச முடிவுவிழா

நம்முடைய ஆசனக்கோவிலிலே நடைபெற்றுவரும வணக்கமாத முடிவுவிழா வருகிறஞாயிற்றுக்கிழமை வழமைபோலக் கொண்டாடப்படும். அன்றுகாலை 7 மணிக்குப் பாடற்பூசையோடும், சாயந்தரம் வேஸ்பர், திருச்சுரூபசுற்றுப்பிரகாரம், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் என்பனவற்ருேடும் விழாமுடிவாகும்.

### வகக்கோட்டை மகோற்சவம்

வகக்கோட்டையிலுள்ள அர்ச். அந்தோனியாரின் புராதன திருசேத்திரத்திலே அம்முனிவரின் வருடாந்த திருநாள் மகோற்சவம் வருகிற ஆனி மாதம் 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடந்தேறும். ஆரம்பஉற்சவங்கள் ஆனிமாதம் 3-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும். திருநாளன்று கண்டி மேற்றிராணியாரான மகாவந். டி. பி. றெஞ்ஞோ ஆண்டவர் பெரிய பாடற்பூசை நிறைவேற்றுவார். பின்னர் அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும், அன்னதானமும் நடந்தேறும். மாத்தளைக்கும் வகக்கோட்டைக்குமிடையில் ஆனிமாதம் 11-ந் திகதிமுதல 17-ந் திகதிவரையில் விசேஷபிரயாணவசதிகள் ஒழுங்குசெய்யப்படும். யாத்திரீகர்கள் விடுதிகளும் அமைக்கப்பட்டிருக்கும்.

### பாராளுமன்ற முதற்கூட்டம்

புதியபாராளுமன்றப் பொதுத்தேர்தல் நாளை 30-ந்திகதி வெள்ளிக்கிழமை முடிவாகும். அதன்மேல் பாராளுமன்ற முதற்கூட்டம் வருகிற ஆனி மாதம் 10-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குநடந்தேறும். ஈறுந்த தேர்தல்முடிவுகள் வெளியானதும் பிரதமராகத்தெரியப்படுகிறவர் புதிய மந்திரிசபையை ஆக்குவார். புதிய மந்திரிமார் ஆனிமாத முதல்வாரத்திலே விசுவாசப்பிரமாணஞ் செய்துகொள்வர். பின்னர் புதிய அரசிறை வருடச் செலவுவிபரங்களை ஆராய்வர். இதற்கென அவர்கள் ஆனிமாதம் 5-ந் திகதிமுதல் 11-ந் திகதிவரையில் கூடுவரெனத்தெரியவருகிறது.

### கள்ளநாணயங்கள்

கள்ளமாக அடிக்கப்பெற்ற ஐம்பது சதநாணயங்கள் தென்மாகாணத்திலே பாவனைக்கு வந்திருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இவைகள் ஏறக்குறைய உண்மையான நாணயங்களைப் போல் காணப்படுகின்றன. ஆனுல், கடுமையானதளத்தில் வீசும்பொழுது உண்டாகும் ஓசைவித்தியாசத்திலிருந்தே கள்ளநாணங்களென அவைகளைக் கண்டறியக்கூடியதாய் இருக்கிறது. அங்குள்ள ஓர் கடைக்காரர் சந்தேகப்பட்டு அவற்றில்ஒன்றை நிலத்திற் போட்டுப்பார்த்துக் கள்ளநாணயமென கண்டறிந்தார். இதுவிஷயமாகப் பொலிசர் விசாரணைசெய்து வருகின்றனர்.

### அதிகமான உணவுக்காக

ஸ்கொத்திலாந்திலே எடின்பருேநகர் வாசிகளான திரு. ஆல்கோண்என்பவரும், அவர்மனைவியாரும் தங்கள் ஆறு பிள்ளைகளுக்கும் அதிகமான உணவு கொடுக்கும்படியாக அங்கிருந்தும் உணவுப்பொருட்கள் ஏராளமாகவுள்ள ஆஸ்திரேலியாவிற்குப் போகும்வழியிலே சென்றவியாழக்கிழமை கொழும்புகண்டு போகின்ருர்கள். ஸ்கொத்திலாந்திலே தங்கள்பிள்ளைகளைப் போஷிப்பது அதிகம்செலவுக்கிடமாய் இருப்பதாக இவர்கள் சொல்லுகின்ருர்கள். இவர்களின் பிள்ளைகள் ஆறுபேருமே இரட்டைப் பிள்ளைகள். திரு. அல்கோண் ஓர்கமத்தொழில் இஞ்சினியர். இவர்சொல்வதாவது: எமதுநாட்டில் வாரம்ஒன்றுக்கு அரைஅவுன்ஸ் பாற்கட்டியே பெற்றுக்கொள்ளுகிருேம். வளரும் பிள்ளைகளுக்கு இதுபோதியதன்று. பிள்ளைகள்ஆறுபேருக்கும் ஆறுசோடி சப்பாத்துகள்வாங்க 10 பவுண், அதாவது ஒருவாரச்சம்பளம் வேண்டியிருக்கிறது. ஆறுபிள்ளைகளுக்கும் உடுப்புகள்தைக்க ஒருமாதச்சம்பளம் தேவைப்படுகிறது. இவர் தமதுமனைவி மக்களுடன் குயீன்சிலாந்தில்போய்க் குடியேறுவார். அங்கே இவருக்கு ஓர்பிழைப்பும், ஆறு அறைகளைக் கொண்ட ஓர்வீடும் கிடைக்கவிருக்கின்றன.

### காலங்கண்ட மூதாட்டி

கொழும்பு, கம்பெனித்தெருவில் பிறிட்ஜ்வீதியைச்சேர்ந்த நோனுஜஸ் மனிஎனும் மூதாட்டி தனக்கு 108 வயதெனக் கூறுகிருள். ஒருவர் அவளைச் சந்திக்கச்சென்றபோது, அவள் ஒருகோணிப்பையிலிருந்து தீப்பெட்டிஒன்றை எடுத்து யாழ்ப்பாணச் சுருட்டொன்றைப் பற்றவைத்தாள். பலவருடக்கணக்காக அவர் விரும்பிப் பாவித்துவருவது யாழ்ப்பாணச்சுருட்டாகும். குடும்பத்தில் ஐந்துதலைமுறைகளை இந்தமூதாட்டி பார்த்துவிட்டாள். அவளது ஒன்பதுபிள்ளைகளில் மிகவும்மூத்தவளான நோனுஸ-ஹைஹாவுக்கு இப்போது 73 வயதாகிறது. மூத்தபேத்தியான நோனுஅற்சனின் வயது 48. இப்போது 26 வயதுள்ள கொள்ளுப்பேத்தியான நூர்பளீல் மூன்றுபிள்ளைகளுக்குத் தாயாவள். நோனுஜஸ்மனி இந்தவயதில்கூடப் பணத்தைச்சரியாகக் கணக்கிட்டுக் கையாளக்கூடியவளாயும், நேராக நடக்கக்கூடியவளாயும் இருக்கிருள். அனுராதபுரத்திலுள்ள பேரப்பிள்ளைகளைப் பார்ப்பதற்குப் பஸ்மூலம் பிரயாணம்செய்கிருள். இப்போதும் சோறுகறிதான் சாப்பிடுகிருள். தினமும் தண்ணீரில் குளிக்கிருள். நீர்கொழும்பில்பிறந்த இவள் மலாயா இராணுவத்தில் கோர்ப்பொறல் பதவி வகித்த ஒருவரின் புதல்வியாவள்.

### சயரோகப் புதியமருந்து

சயரோகத்துக்கெனப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள "ஐசனிகொட்டினிக் அசிட் ஹைடியாசைட்" எனும் அருமையானமருந்து இலங்கையிலுள்ள பெரியசயரோக ஆஸ்பத்திரி ஒன்றில் பாவிக்கப்பட்டுச் சிறந்தபலன் ஏற்பட்டிருக்கிறது. நியூயோக்நகரிலுள்ள சிவில்ஆஸ்பத்திரியில் இந்த மருந்து முதன்முதலாகப் பரிசோதிக்கப்பட்டது. இலங்கையிலே இதனைப் பரிசோதிப்பதற்கெனப் பத்துச்சயரோகிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் சுவாசப்பைச் சயரோகத்தால் கடுமையாகப் பீடிக்கப்பட்டிருந்தனர். மூன்றுமாதங்களுக்குமேல் இவர்கள் உயிர்பிழைத்திருக்க மாட்டார்களென்று டக்றர்மார் எதிர்பார்த்தனர். இந்தப்புதியமருந்தை அவர்களுக்குக் கொடுத்ததில் காய்ச்சல்இறங்கியதோடு சாப்பாட்டிலும் பிரியம்ஏற்பட்டிருக்கிறது. இம்மருந்துப்பில்லைகள் "ஸரிருப்டமைசின்" எனும் மருந்தைக்காட்டிலும் மலிவானது. ஒருபில்லையின் விலை 16 சதம். ஒருநோயாளிக்கு ஒரு நாளைக்குச் சராசரிஆறு பில்லைகள் தேவைப்படும். பெருந்தொகையாகச் செய்யுமிடத்து ஒரு பில்லையின் விலை 5 சதமாக இறங்கிவிடுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பாப்பரசரும் சமாதானமும்

இத்தாலிய பாதுகாப்புமந்திரி காரியாலயத்தைச்சேர்ந்த 2,000 தொழிலாளர்களுக்குப் பரிசுத்த பாப்பரசர் சென்ற 19-ந்திகதி யன்று பேட்டியளித்துப் பேசிய போது: "ஆத்துமத்திலும் சரீரத்திலும் சமாதானமும், குடும்பத்திலும் வேலையிலும் சமாதானமும் உலகசமாதானத்துக்கு மூலாதாரமும், முக்கியமுமானவைகள்; அத்தகைய சமாதானம் கடவுள் மூலமாக மாத்திரம் அடையக்கூடியதாகும்" எனக் கூறலாயினர். கம்யூனிஸ்தர்களும், மற்றும் லோகாயதவாதிகளும் பிள்ளைகளுக்கு ஊட்டப்படும் கல்வியிலிருந்து கடவுளைவிலக்கி வைப்பதாலே "இரத்தப்பிரவாகமற்ற, ஆனல், பயங்கரமிக்க சதிமான கொலை"யைப் புரிகின்றார்கள் என்று அவர்கள்மேல் அவர் குற்றம்பாரித்தனர்.

"மாசற்றபிள்ளைகள்தானும் இரத்தப்பிரவாகமற்ற, ஆனல், பயங்கரமிக்க சதிமானக் கொலைக்குப் பலியாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். தங்கள் இருதயங்களிலே கடவுள்அழிக்கப்பட்டதோடு அப்பிள்ளைகள் கடவுளையும், அவரது திருச்சபையையும் எதிர்த்துச் சீற்றங்கொண்டவர்களாய்க் குட்டிச்சாத்தான்கள் ஆகியிருக்கின்றார்கள். இந்தப் பாரதூரமான பழிபாதகத்தைச் செய்திருக்கின்ற எவராவது தான் சமாதானத்தை ஆசிப்பதாக உரித்தாடமுடியுமா?" என்று பரிசுத்தபிதா கேட்டு, தங்கள் வேலைத்தலங்களுக்குத் தங்களுடன் கடவுளையும் கொண்டு செல்லுமாறு தொழிலாளர்கள் சகலருக்கும் மனுப்பண்ணிக் கொண்டார். "உங்களை விழிப்புடன் காவல்செய்கிறவராய் மாத்திரமல்ல, ஆனல், உங்கள் இயக்கங்களை மனதில்எழுப்புகிறவரும், பெரும்பாங்கு அவைகளை வழிநடத்துகிறவருமாயிருக்கிற கடவுளுடன் அவரது திருச்சந்நிதானத்திலே நினைக்கவும், பேசவும், தொழிலாற்றவும் பிரயாசப்படுங்கள்" என்றும் பரிசுத்தபிதா அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

## ஆலயப் பெரியமணி

ஆஸ்திரியாவின் தலைப்பட்டணமாகிய வீயன்னநகரிலுள்ள அர்ச். ஸ்ரீபினின் ஆசனக்கோவில் புதியபாரிய மணியானது சென்ற சித்திரைமாதம் 27-ந்திகதி முதன்முதலாக அடிக்கப்படலாயிற்று. "பும்மெறின்" எனப்பெயரிய இந்தமணியானது இருபதுதொன்னுக்கு மேல் நிறையுடையதும், ஐரோப்பாவிலுள்ள பிரமாண்டமான மணிகளில் ஒன்றுமாகும். இது ஆலயசதுக்கத்திலே சாரக்கட்டில் ஏற்றப்பட்டு வீயன்னநகர் அதிமேற்றிராணியாரான கருதினல்இன்னிற்சர் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்படலாயிற்று. இதன் முதற்தொனிகள் வானொலிமூலம் அஞ்சல்செய்யப்பெற்று, ரோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாலயமணிகளால் பதில் அளிக்கப்படலாயிற்று. அதன்மேல் பரிசுத்த பாப்பரசரின் சொற்பொழிவும் வானொலிமூலம் அனுப்பிவைக்கப்பட்டது. அன்றுலின்ஸ்நகரிலிருந்து இந்தமணி கொண்டு செல்லப்பட்ட 100 மைல்நீளமான வீதிநீளம் பத்துலட்சத்துக்கு மேற்பட்டமக்கள் இருமருங்கும் வரிசையாகநின்றார்கள்.

## பிராமணரின் பரோபகாரம்

சென்றசித்திரைமாதம் 30-ந்திகதியன்று தூத்துக்குடிக் குஷ்டரோகிகள்விடுதியிலே புதிதாகக் கட்டியெழுப்பப்பெற்ற அர்ச். சூசையப்பர் கோவில் ஆசீர்வதிக்கப்பட்டபின் ஸ்ரீமத் கிட்டுஐயரும், மற்றுஞ்சிலபிராமணநண்பர்களும் குஷ்டரோகிகளுக்குத் தங்கள்கையாலேயே நல்லசாப்பாடு அளித்தார்கள். இதற்கென இவர்கள் தங்கள் நண்பர்களிடம் பணம்சேகரித்து மிகநேர்த்தியான போசனம் தயாரித்திருந்தார்கள். "இவ்வளவுபிரயாசை எடுத்துக் கொள்ளுவதற்கு உங்களைத் தூண்டியது என்ன?" என்று நண்பர்கள் கேட்டபோது, "குஷ்டரோகிகளைத் தங்கள் பிள்ளைகளைப்போலவே தாய்க்குரியபட்சத்துடன் பராமரித்து வருகின்ற அந்தஅம்மையார்கள் (அந்தவிடுதியை நடத்துகின்ற பிரான்சீஸ்குவின்சபைக் கன்னியாஸ்திரிமார்கள்) காட்டும் உயர்ந்தமாதிரிகையே எங்களையும் ஓரளவிற்குப் பரோபகாரப் பணிபுரியத்தூண்டியது" என்று அவர்கள் பதில்அளித்தார்கள். அங்கு புதிதாகஎழுப்பப்பெற்றுள்ள அர்ச். சூசையப்பர் கோயில் 100அடிநீளம், 20அடி அகலமுள்ளது. 20 சதுரஅடி விஸ்தீரணமுள்ள இரண்டுஇறக்கைகளையும்கொண்டது. இதைக் கட்டுவதற்குச் சுமார் 30,000 ரூபா பிடித்தது. மகாவந். ரோச்ஆண்டவரவர்கள், உதவி மேற்றிராணியாராகிய மகாவந். பெர்னண்டோ ஆண்டவருடையவும், 8 குருப்பிரசாதிகளுடையவும் உதவியுடன் கோயிலைஆசீர்வதிக்கும்திருச்சடங்கை நிறைவேற்றினர். பலசபைகளைச் சேர்ந்த 40 கன்னியாஸ்திரீமார்களும், ஏராளமானகிறீஸ்தவர்களும் விஜயஞ்செய்திருந்தார்கள்.

## சிலுவையில் அறைவதற்கு ...

சீனக்கம்யூனிஸ்தர்கள் ஓர் முண்முடிசெய்து பொலிஸ்பகுதிக்குஅனுப்பி, கொன்ஸ்ரன்ரீன சாரியஸ்எனும் கன்னியாஸ்திரீயைச் சிலுவையில்அறைந்து கொல்லுமாறு கேட்டார்கள். இந்தக்கன்னியாஸ்திரீ யூனன் மாகாணத்தில் சவோட்டங் நகரிலுள்ள மிஷன்ஆஸ்பத்திரியின் தலைவியாவர். யூகோசிலேவிய நாட்டினர். "பகிரங்கவிசாரணையிலே அவர்மீதுகுற்றஞ்சாட்டப் போதிய பொதுமக்கள் கிடைக்கும்பட்சத்தில் சிலுவையில் அறைந்து கொல்லுவதுஎன்ற தீர்ப்பைஅளிப்போம்" என்று பொலிசர் தெரிவித்தனர். ஆனல், குற்றஞ்சாட்டப் போதியதொகையினர் பொதுமக்களில் கிடைக்கவில்லை. தீவிர கம்யூனிஸ்தபிரசாரகர்கள் எவ்வளவோமுயற்சியெடுத்தும் பயனில்லாமல் போய்விட்டது. "புரட்சியை எதிர்ப்பவர்களுக்கும், கொள்ளைக்கூட்டத்தினருக்கும் உதவியளித்தது", "இரண்டாவது உலகயுத்தத்தின்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பெற்ற அமெரிக்கபோர் வீரர்களிடமிருந்து ஏராளமான பணம் பெற்றுக்கொண்டது" ஆகியகுற்றங்களே இந்தக் கன்னியாஸ்திரீமார்மீது சாட்டப்படவிருந்த குற்றங்கள். ஆனல் இவர்களிடமிருந்து கடந்த 15 வருடகாலமாக நன்மையேபெற்றுவந்த அந்நகர் வாசிகள் அவர்கள்மீது குற்றஞ் சாட்டுவதற்கு மறுத்துவிட்டார்கள். எனவே கொன்ஸ்ரன்ரீன கன்னியாஸ்திரீயும், மற்றும் நான்கு கன்னியாஸ்திரீமாரும், ஒருமேற்றிராணியாரும், ஒருடக்டரும் வெளியேற்றப்பட்டார்கள். வெளியேற்றப்படுமுன் கொன்ஸ்ரன்ரீன கன்னியாஸ்திரீ ஆறுமாதம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். வெளியேற்றப்பட்ட மேற்றிராணியார் மகாவந். யோசெவ் கெரெக் ஆண்டவரவர்கள்.



யாத்திரைக்கன்னிகை பத்திமாகிரியைச் சந்தித்த ஞாபக தினமாகிய வருகிறஆனிமாதம் 7-ந் திகதி பத்திமாகிரியில் நோயாளரின் தினமாகும். காலை 7 மணியளவில் நோயாளர் பேரால் பாடற்பூசை நிறைவேற்றப்படும். சாயந்தரம் 4-30 மணியளவில் தேவநற்கருணை எழுந்தேற்றஞ்செய்யப்பட்டுச் செபமாலை ஓதப்படும். வியாதிக்காரரை ஆசீர்வதிக்குஞ்சடங்கு மகாவந். ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரவர்களால் நிறைவேற்றப்பட்டுத் தேவநற்கருணை ஆசீர்வாதத்துடன் முடிவாகும்.

ஆசீர்வாதம் பெறவிரும்பும் நோயாளர்யாவரும் தங்கள் நாமங்களைப் பண்டத்தரிப்புக் கட்டளைக்குருவானவரிடம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். தங்கள்நோய்களைப்பற்றிய சிறியவிபரமொன்றை ஆங்கிலவைத்தியர் அல்லது சுதேசவைத்தியரிடம் வாங்கி அனுப்பவேண்டும். கடந்த வருடங்களில் பத்திமாகிரியில் மாதாவைஇரந்துமன்றாடியவர்களுக்கு அத்தாயார் தமதுதிருஅருளைப் பலவிதமாயும் காட்டியிருக்கின்றாரென்பதை அறிவோம். அவ்வாறான நன்மைகளைப்பெற்றவர்கள் அவற்றை நமக்குஅறிவித்தல் நல்லது. ஏனெனில், (தோபியாஸ் XII, 7) "சர்வேசுரனுடையகிரிகைகளை நாம் வெளிப்படுத்தும்போது அவரைச் சங்கிக்கிறோம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. நோயாளரின் வியாதிகள், குணங்கள்ஆதியவற்றையும், அவற்றினின்று குணமானதையும் நாமறிந்தால் அதிக திருப்திகரமானமுடிவடைய இவைகள் அதிகபலமான சாதனமாகும்.

நோயாளர் இவ்விதமான ஆசீர்வாதங்களைப் பெறுவதற்குத் தங்களை ஆயத்தஞ்செய்யவேண்டும். எப்படியெனில், தினந்தோறும் செபமாலையை விசேஷ பத்திவேகத்துடன் ஓதியும், அத்துடன் தங்கள்வருத்தங்களை நல்லமனதுடன் யேசுநாதருக்கும், அவர்திருத்தாயாருக்கும் ஒப்புக்கொடுத்தும் வரவேண்டுமென விரும்புகின்றோம். அறிவிக்கப்பட்ட வியாதிக்காரரின் பெயர்கள் கிடைத்தவுடன் மாதாவின்பாதத்தில் வைக்கப்படும். பிறசமயநண்பர்களும் இதில் சேர்ந்துகொள்ளலாம். இத்துண்டுப்பத்திரம் கிடையாதவர்கட்கும், அறியாதவர்கட்கும் இதனை வாசிக்கும் அன்பர்கள் அறிவித்தால் நன்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய திருச்சுரூபம்

அப்போஸ்தலரான அர்ச். தோமையாரின் அழகான திருச்சுரூபம். 5 அடி உயரமுள்ளது. இப்போதே வந்து சேர்ந்தது. இக்கால மாதிரியான சிற்பவேலைப்பாடமைந்தது. கோவிலை அலங்கரிக்கக் கூடிய வசீகரமும், அலங்காரகோலமுமுடையது. தேவைப்படுவோர் பின்வரும் விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## திருநாள் அட்டவணை

ஆனிமாதம் 1952

| | | | |
|---|---|---|---|
| ஞா | 1 | இஸ்பிரீத்து சாந்துவின் ஆகமனத்திருநாள் | (சி) |
| திங் | 2 | அ. பொதீனூர் | (சி) |
| செ | 3 | அ. இசவாகப்பர் | (சி) |
| புத | 4 | அ. பிரான்சீஸ்கு கறக்சியார் | (சி) |
| வி | 5 | அ. பொனிப்பாசியார் | (சி) |

சத்தியவேத
**பாதுகாவலன்**

1952-ம் ஆண்டு
வைகாசி மாதம் 29-ந் திகதி

## திரு இருதய மாசம்

மனுமக்களை அணைகடந்தவிதமாய் நேசித்து, அவர்களுடைய இரட்சணியத்தின்மட்டிலே என்றைக்கும் தணியாத காதலுடைய தாய் இருந்துவருகின்ற யேசுவின் திருஇருதய வணக்கமாசம் பிறக்கின்றது. "இதோ மனிதரை அவ்வளவாக நேசித்த இருதயம்" என்று தன்னைத்தானே பகிரங்கமாகக் காண்பித்து, தன்பக்கமாக மனித இருதயங்களை அன்பால் கவர்ந்திழுக்கும் யேசுவின் திருஇருதயப் பத்திக்கென்று விசேஷவிதமாகத் திருச்சபை ஏற்படுத்திய ஆனிமாசம் வருகின்றது. யேசுவின் திருஇருதயம் தனது ஞானப் பொக்ஷங்களாகிய வரப்பிரசாதங்களை அதிகமதிகமாக மனிதர்மீது பொழிகின்ற மாசம் இது. அவர்கள் ஆவலுடன்கேட்கும் ஞான வரங்களை அதிகந் தாராளமாக அளிக்கும் மாசம் இது. ஆகவே திருஇருதய பக்தகோடிகளெல்லாம் இந்தமாதத்தைப்பெரிதுங் குதூகலத்துடன் வரவேற்பார்கள் என்று கூறவேண்டியதில்லை.

நம்முடைய திவ்வியகர்த்தர் அர்ச். மார்க்கரித்து மரியம்மாளுக்குக் கொடுத்தருளிய காட்சிகளிலே தம்மை மனிதர் புறக்கணித்து மறந்து அவமதிக்கிறதைப்பற்றியும், அவர்கள் தம்மைவிட்டுத் தூர அகன்றுபோய் இருக்கிறதைப்பற்றியும் அடிக்கடி முறைப்பட்டிருக்கின்றார். தம்மை மனிதர் நேசிக்கத்தக்கதாக அவர்கள் தமது இருதயத்தை அறியப்பண்ணுவது தம்முடைய தணியாத ஆசையென்று வசனித்திருக்கின்றார். மனிதர் தம்மைப்படச்செய்த மகா கஸ்திவாதைகளுக்கும், அவமானங்களுக்கும் பரிகாரமாக அவர்கள் தம்மைஅறிந்து நேசித்து மகிமைப்படுத்த வேணுமென்ற வேகரமான ஆசையை எடுத்துக் காட்டியிருக்கின்றார். அதனால் நாமெல்லாம் இந்தமாசத்திலே அத்திரு இருதயத்தை அதிகமதிகமாக அண்டிப்போவதாலும், அதனை யாவரும் அறியப் பண்ணுவதாலும், அறிந்து மகிமைப்படுத்தச் செய்வதாலும், அதன் நேசத்துக்குப் பிரதிநேசம் காண்பிப்பதாலும், அதற்கு ஏற்படும் நிந்தை அவமானங்களுக்குத் தகுந்த பரிகாரம்செய்வதாலும் நாம் உண்மையான திரு இருதய பக்தர்களென்று நம்மைக்காண்பிக்க வேண்டியது. திருச்சபை ஸ்தாபகமான அக்காலத்திலே யேசுவின் திருச்சிலுவை நம்பிக்கை அளித்து விருதுசின்னமாய் விளங்கியதுபோல இக்காலத்திலே யேசுவின் திருஇருதயம் நம்பிக்கை அளித்து விருதுசின்னமாய் விளங்குகின்றது.

கொன்ஸ்தந்தீன் மன்னர் செய்தபோரில் சிலுவை எப்படி விருதுகொடியாக இருந்ததோ அதுபோலவே நமதுபோரிலும் யேசுவின் திருஇருதயம் நமது விருது துவசமாய் இருக்கக்கடவது. எவ்வாறு சிலுவையானது அம்மன்னருக்கும், அவருடைய போர்வீரர்களுக்கும் மனோதைரியத்தையும், வலிமையையும், உற்சாகத்தையும், சந்தோஷத்தையும்கொடுத்து முடிவில் அவர்களுக்கு வெற்றியை அளித்ததோ அதுபோலவே இன்றும் யேசுவின் திருஇருதயம்ஒன்றே நமக்குவேண்டிய மனத்திடனையும், உறுதியையும், வலிமையையும், சமாதானத்தையும்தந்து இறுதியாக வெற்றியையும் அளிக்கவல்லதாய் இருக்கின்றது. ஏனெனில், அத்திரு இருதயத்தில்தான் ஈடேற்றம். அதில்தான் சீவியம். சத்துருக்களிடத்தினின்று நம்மைப்பாதுகாத்து இரட்சிக்கும்வரம் திருஇருதயத்தினிடம்தான் இருக்கின்றது. யேசுவின் திருஇருதயத்தில்தான் பரலோக இன்பம் பொழிகின்றது. அவ்விருதயத்தில்தான் மனம் தைரியமடையும். அதில்தான் புத்திக்குச் சந்தோஷமுண்டாகும்.

## திவ்விய இஸ்பிரீத்துசாந்து திருநாள்

### சுவிசேஷ வாசிப்பு
(அரு. 14: 23—31)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கிச் சொன்னதாவது: ஒருவன் என்னைச் சிநேகித்தால் என்வாக்கியத்தை அநுசரிப்பான்; என் பிதாவும் அவனைச்சிநேகிப்பார்; அன்றியும், அவனிடத்தில் வருவோம், அவனுக்குள்வாசம் செய்வோம். என்னைச் சிநேகியாதவன் என்வாக்கியங்களை அநுசரியான். மேலும், நீங்கள் கேட்டவாக்கியம் என்னுடையதல்ல; என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது. நான் உங்களோடு வாசம் செய்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். ஆனால், பிதா என் நாமத்தினால் அனுப்பும் தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவானவர்தாமே உங்களுக்குச் சகலத்தையும்படிப்பிப்பார்; நான் உங்களுக்குச் சொன்னயாவற்றையும் அவர் உங்களுக்கு ஞாபகப்படுத்துவார். சமாதானத்தை உங்களுக்கு விட்டுப் போகிறேன். நான் என் சமாதானத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன். ஆனால், நான் உங்களுக்குக்கொடுப்பதோ உலகங் கொடுப்பதுபோலல்ல. உங்கள்இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருக்கக்கடவது. நான்போய், உங்களிடத்தில் மறுபடி வருகிறேன்என்று உங்களுக்கு நான் சொன்னதைக் கேட்டீர்களே; நீங்கள் என்னைச் சிநேகிப்பீர்களேயாகில், பிதாவினிடத்திற் போகிறேன்என்றதினால் மெய்யாகவே சந்தோஷப்படுவீர்கள். ஏனெனில், பிதா என்னிலும் அதிகம் பெரியவராயிருக்கிறார். மேலும் இது சம்பவிக்கும்போது நீங்கள் விசுவசிக்கும்படி இது சம்பவிக்கிறதற்குமுன்பே இப்பொழுதே உங்களுக்குச் சொன்னேன். இனி நான் உங்களோடு அநேக காரியங்களைப் பேசேன். ஏனெனில், இவ்வுலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்பேரில் எவ்வளவேனும் அதிகாரமில்லை. ஆயினும், நான் பிதாவைச் சிநேகிக்கிறேன்என்று உலகம் அறியும்பொருட்டுப் பிதா எனக்கு எப்படிக் கட்டளையிட்டாரோ அப்படியே செய்கிறேன் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## வேதசாட்சியின் புன்முறுவல்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வர். அவரையே நம்பியுள்ளேன். என் மரணத்தால் ஓர் ஆத்துமம் இரட்சிக்கப்படவேண்டும். நரகத்தினின்று தப்பித்து மோட்சம்சேர வேண்டும்என்பதே எனதுமூன்றாவது மன்றாட்டாகும். என்னைச்சுட்டுக்கொல்ல நீங்கள் தயாராயிருக்கிறீர்கள். உங்கள் எல்லோரையும் கடவுள்பேரால் முழுமனதுடன் மன்னிக்கிறேன். உங்களில் யாராகிலுமொருவன் கடவுளால் தெரிந்துகொள்ளப் படுவானாயின், அவன் மனந்திரும்புதலுக்கு என்னுயிர் பிரயோசனமாயிருப்பின்—எனக்கு அளவு கடந்ததிருப்தி அதுவேயாகும்" எனக்கூறி எதிரேநிற்கும் வீரர் ஒவ்வொருவரையும் புன்முறுவலோடும், கசிந்தமனதோடும் உற்றுப்பார்த்தார்.

அப்போது அந்தவீரர்களில் ஒருவன் குருவானவரின் புன்முறுவலால் கவரப்பட்டு அவரை நோக்கினான். இருவர் நேத்திரங்களும் சந்தித்தன. அவன் உடனே கையிலிருந்த துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டுச் சுவாமியாரையணுகினான். முழந்தாட்படியிட்டான். அவரது அர்ச்சிக்கப்பட்ட கரங்களை முத்தமிட்டான். "பிதாவே! நீர் விரும்பிக்கேட்ட ஆத்துமம் நானுவேன். கடவுள் உமதுமன்றாட்டைக் கேட்டருளினார். என் பாவத்திற்காக மனஸ்தாபப்படுகிறேன். என்பேரில் இரக்கமாயிரும். இதோ! உம்மோடுகூட யேசுவுக்காக என்னுயிரையும் துறக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று கண்ணீர்ததும்ப உரைத்துக் குருவானவரருகில் நின்றான். முன்னர் தன்தோழர்களும், இப்போது தன்கொலைஞர்களுமாகிய பொதுவுடைமை வீரர்களை ஏறெடுத்துப் பார்த்தான். குருவும் சீஷ்யனும் தேவனை மன்றாடினார்கள். வீரர்தலைவன் இருவரையுஞ் சுடும்படி ஏவினான். டப்—டப் எனக் குண்டுகள் வெளிப்பாய்ந்தன. புன்னகைபூத்த தேசிகரும், மனஸ்தாபப்பட்ட நாஸ்திகனும் ஒருவரையொருவர் பிடித்தவண்ணம் தரையில் குப்புறவீழ்ந்தார்கள். அவர்களின் ஆத்துமங்கள் தேவபதஞ் சென்றன.

## சுதேச வர்த்தமானம்

### அர்ச். இசிதோர் திருநாள்

கமக்காரரின்பாதுகாவலராய் ஏழாலையிலே கோவில்கொண்டிக்கும் அர்ச். இசிதோர்திருநாள் வருகிறஆனிமாதம் 8-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைபோலக் கொண்டாடப்படும். திருவிழாக்கள் 3-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

### தமிழ்க்காங்கிரஸ்பிரதிநிதிகள்

தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர்களாய் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, பரித்தித்துறை, சாவகச்சேரி எனும் 4 தொகுதிகளிலும் தேர்தலில் முறையே போட்டியிட்ட திருவாளர்கள்; ஜி. ஜி. பொன்னம்பலம், அல்பிறெட்தம்பியையா, ரி. இராமலிங்கம், வி. குமாரசுவாமி ஆகியநால்வரும் வெற்றியடைந்திருக்கிறார்களென அறிந்து சந்தோஷமுற்றோம். நாளை வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, கோப்பாய், வவுனியாத்தொகுதிகளில் தேர்தல்நடந்தேறும்.

### புதிய அரசியற்கட்சி

"லங்கா ஜனஹிதாக் கட்சி" எனும் நாமத்துடன் இலங்கையில் மற்றுமோர் புதிய அரசியற்கட்சியை அகலவத்தையைச்சேர்ந்த அத்துறையில் வசிப்பவரான திரு. டபிள்யு. தர்மபால சந்திரசிங்காஎன்பவர் ஆக்கியிருக்கின்றார். தற்போது நிகழும் பாராளுமன்றப் பொதுத்தேர்தல்சம்பந்தமாய் அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்கள் சமர்ப்பித்தபின்னரே இக்கட்சி ஆரம்பிக்கப்படலாயிற்று. அதனால் இன்னும் ஐந்துவருடங்களுக்குப்பின் நடக்கும் அடுத்தபொதுத்தேர்தலிலே இக்கட்சிஅபேட்சகர்கள் போட்டியிடுவார்கள். இதுவும் ஒருஆறுதல்தான்.

### பிரித்தானிய கார்கள்

இவ்வருடத்தின் முதல்மூன்று மாதங்களிலும் பிரித்தானியிலிருந்து இலங்கையில்வந்து இறக்குமதியான மோட்டர்கார்கள், சைக்கிள்களின் பெறுமதி 21,10,000 பவுண். சென்ற 1951-ம் ஆண்டின் முதல்மூன்று மாதங்களிலும் இறக்குமதியான கார்கள், சைக்கிள்களின் பெறுமதி 8,52,000 பவுண். இவ்வருடத்தின் முதல்மூன்றுமாதங்களிலும் பிரித்தானியதேசம் 1,893 கார்களும், 13,655 சைக்கிள்களும் இலங்கைக்கு அனுப்பிவைத்திருக்கிறது. அதாவது நாள் ஒன்றுக்குச் சராசரியாக 21 கார்களும், 150 சைக்கிள்களுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுத்தேர்தல் முடிவுகள் 24-5-52

சுதந்திரஇலங்கையின் முதலாவது பொதுத்தேர்தலும், சர்வசனவாக்குரிமை வழங்கப்பட்டதன்மேல் நான்காவது பொதுத்தேர்தலும் சென்ற 24-ந்திகதி சனிக்கிழமை ஆரம்பமாயிற்று. அன்றுதினம் 20 தொகுதிகளில் அடங்கிய 23 ஸ்தானங்களுக்கும் நடைபெற்றதேர்தலிலே ஐக்கிய தேசியக்கட்சி (யு. என். பி.) 11 ஸ்தானங்களைக் கைப்பற்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 4 ஸ்தானங்களையும், கம்யூனிஸ்தகட்சி 1 ஸ்தானத்தையும், சமஷ்டிக்கட்சி 1 ஸ்தானத்தையும், சுயேச்சைக்கட்சி 6 ஸ்தானங்களையும் கைப்பற்றிக்கொண்டன. இடதுசாரிகளின் கோட்டைகளென்று கருதப்பட்டுவந்த கண்டியிலும், களுத்துறையிலும் ஐக்கியதேசியக்கட்சி வெற்றிபெற்றமையும், கொழும்பு மத்தியதொகுதியில் அரசாங்கமந்திரியாயிருந்த தொழிற்கட்சித்தலைவர் திரு. ஏ. ஈ. குணசிங்க அவர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஅங்கத்தவர்களான திரு. பி. டி. எஸ். குலரத்தின, ஸ்ரீமதி. டி. கே. இலங்கைரத்தின என்பவர்களும், தோல்வியடைந்தமையும் ஈண்டுகுறிப்பிடத்தக்கன. சமசமாஜக்கட்சிகள் அன்றுமுற்றாகப் படுதோல்வியடைந்தன. அன்றுதேர்தல் நடைபெற்ற தொகுதிகளும், வெற்றிபெற்ற அபேட்சகர்களின் நாமங்களும், அவரவர் பெற்ற அதிகப்படியான வாக்குகளும் வருமாறு :

**1. கொழும்பு தெற்கு**
மேஜர் ரி. எவ். ஜயவர்த்தன,
ஐ. தே. கட்சி 10,918
அதிகப்படி 5,738

**2. கொழும்பு மத்தியதொகுதி**
(மூன்றுபிரதிநிதிகள்)
திரு. பீற்றர் கெனமன்,
கம். கட்சி 32,346
டக்றர் எம். சி. எம் கலீல்,
ஐ. தே. கட்சி 25,647
சேர் ருஸிக் பரீத்,
சுயேச்சை 24,911
1-வது அதிகப்படி 6,699
2-வது „ 736
3-வது „ 5,068

**3. மாத்தளை**
திரு. பேர்னுட் அலுவிகாரை,
ஸ்ரீல. சு. கட்சி 12,314
அதிகப்படி 3,476

**4. கடுகனுவை**
(இரண்டுபிரதிநிதிகள்)
திரு. ஈ. ஏ. நுகவெல,
ஐ. தே. கட்சி 30,503
ஜனுப் சி. ஏ. எஸ். மரைக்கார்,
ஸ்ரீல. சு. கட்சி 26,837
1-வது அதிகப்படி 3,666
2-வது „ 6,052

**5. மன்னூர்**
திரு. சி. சிற்றம்பலம்,
சுயேச்சை 5,876
அதிகப்படி 586

**6. திரிகோணமலை**
திரு. என். ஆர். இராசவரோதயம், சமஷ்டிக்கட்சி 4,450
அதிகப்படி 586

**7. மூதூர்**
ஜனுப் எம். ஈ. எச். முகம்மத் அலி, சுயேச்சை 6,050
அதிகப்படி 2,751

**8. கற்குடா**
திரு. வி. நல்லையா,
ஐ. தே. கட்சி 7,599
அதிகப்படி 1,370

**9. பொத்துவில்**
ஜனுப் எம். எம். இபிருஹீம்,
ஐ. தே. கட்சி 8,093
அதிகப்படி 558

**10. கல்முனை**
ஜனுப் ஏ. எம். மேர்சா,
சுயேச்சை 6,078
அதிகப்படி 1,664

**11. புத்தளம்**
ஜனுப் எச். எஸ். இஸ்மாயில்,
ஐ. தே. கட்சி 9,117
அதிகப்படி 6,588

**12. தொடங்கஸ்லந்தை**
சேர் ஜோண் கொத்தலாவலை,
ஐ. தே. கட்சி 21,934
அதிகப்படி 15,468

**13. ஹொறவப்பொத்தானை**
திரு. டி. பி. பொகொலியத்த திசாவை, ஐ. தே. கட்சி 4,766
அதிகப்படி 1,510

**14. பொலனறுவை**
திரு. சி. பி. டி. சில்வா,
ஸ்ரீல. சு. கட்சி 5,498
அதிகப்படி 2,642

**15. மாவனல்லை**
திரு. சி. ஆர் பெலிகம்மன,
ஸ்ரீல. சு. கட்சி 15,225
அதிகப்படி 3,378

**16. கண்டி**
திரு. ஈ. எல். சேனநாயக,
ஐ. தே. கட்சி 11,349
அதிகப்படி 3,705

**17. கலகா**
திரு. டி. பி. பனபொக்கை,
ஐ. தே. கட்சி 10,962
அதிகப்படி 4,606

**18. களுத்துறை**
திரு. பி. ஏ. குறே,
ஐ. தே. கட்சி 11,665
அதிகப்படி 332

**19. மட்டக்களப்பு**
திரு. ஆர். பி. கதிர்காமர்,
சுயேச்சை 11,420
அதிகப்படி 3,460

**20. பட்டிருப்பு**
திரு. எஸ். எம். இராசமாணிக்கம்,
சுயேச்சை 7,672
அதிகப்படி 474

## மரணசங்கதி

காங்கேசன்துறைவாசரும், தற்போது யாழ்ப்பாணம் சென்ஜேம்ஸ் ஆண்பாடசாலைத் தலைமைஆசிரியருமான திரு. ஜே. றேமான்அவர்களின் சிரேஷ்டபுத்திரனும், இலங்கைக்குடியேற்ற வெளியேற்றகாரியாலய கிளைஸ்தாபன இந்திய மண்டபம்காம்பில் லிகிதராகக் கடமையாற்றியவரும், அடக்கம், சாந்தம், தேவபக்தி, குருபக்திமுதலியவைகளில் சிறந்தவருமான திரு. ஆர். சேவியர் தங்கராசாஅவர்கள் 13-5-52 செவ்வாய்க்கிழமை பிற்பகல் கடற்குளிப்பின்போது அகால மரணமடைந்த துயரசெய்தியானது பலருக்குமே மிகுந்தஅதிர்ச்சியையும், கவலையையுந் தாலாயிற்று. மரிக்கும்போது இவருக்குவயது 19.

இவரதுபூதவுடல் அவர்கடமையாற்றிய காரியாலயத் தலைமைஅதிகாரியினதும், சகோதரஉத்தியோகஸ்தரினதும் பேருதவியாலே தந்தையாரால் பலமைல்பிரயாணஞ்செய்து 17-5-52 சனிக்கிழமைகாலை காங்கேசன்துறை வந்து சேரலாயிற்று.

அன்றுபிற்பகல் பலஇடங்களிலுமிருந்துவந்த இனசனர், ஆசிரியர்கள், பழையஉடன்மாணவர்கள், அனுதாபிகள் பெருந்திரளாய்க்கூடித் துக்கித்து அனுதாபந்தெரிவித்துநிற்க, வண. ஜே. எவ். சேவியர், அதிவண. ரி. ஜே. ஏ. மதுரநாயகம் எனும்குரவர்கள் இருவரும் அந்திம திருச்சடங்குகளை நிறைவேற்றிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கச் சகலவரிசைகளுடனும் பூமதானம் நிறைவேறியது. இவரைஇழந்து துன்புறும் தந்தைதாயர்கள், சகோதரர்கள் இனசனர்களுடன் நானும் அனுதாபப் படுகின்றேன்.

R. I. P. — நிருபர்

பாலையூற்று, பரிசுத்த லூர்துநாயகி

## வருடாந்த திருநாள்

இலங்கையிலே கீழ்மாகாணத்தில் முதன்மையும், பிரபல்யமும்பெற்ற யாத்திரைஸ்தலங்களில் ஒன்றாய் விளங்குவதும், திரிகோணமலைக்கண்மையில் உள்ளதுமாகிய பாலையூற்றிற் கோயில் கொண் டெழுந்தருளி, எல்லாமதத்து மக்களையும் தம்பாலிழுத்து அற்புதங்கள்மூலம் அருள்பாலித்து வரும் தேவஅன்னையாகிய பரிசுத்தலூர்த்துநாயகியின் திருநாள் 1952-ம் வருடம் ஆனிமாதம் 7-ம் திகதி யாவர்க்கும் பொதுவான மாலையாராதனையுடனும், 8-ம் திகதி திவ்வியபூசைப்பலி—திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் என்பவற்றுடனும் பத்தியருட்சிக்குரியமுறையிற் கொண்டாடப்படும். வண. Z. N. குரூஸ் சுவாமியவர்களின் பிரசங்கத்துடன் ஞான ஒடுக்கமும், விளக்கங்களுடன் ஆராதனைகளும் நடைபெறும். யாத்திரிகர்கட்குவேண்டும் வசதிகளெல்லாம் இயன்றவரை செய்யப்படும். யாவரும்சமூகந்தந்து பத்திமுயற்சிகளிற் பங்குபற்றிப் பலனடைந்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாலைஆராதனை 10-5-52 தொடக்கமாகநடைபெறுகின்றது.

தேவதாயாரின் ஆசிவிரும்பும்
T. ஆறென்ட்ற்ஸ் Mis .Ap,
கட்டளைக்குரவர்

பரிசுத்தவியாகுலமாதாகோவில்
சின்னக்கடை
திரிகோணமலை

**Pandatheruppu**
**Village Committee**
**பண்டத்தரிப்புக் கிராமச்சங்கம்**

## Notice Calling for Tenders
## கிராம வேலை விளம்பரம்

பண்டத்தரிப்பு - மாதகல் றேட்டில் இருந்து கவண்மேந்து ஆஸ்பத்திரி றேட்டுப்போட.

1. மேற்படிவேலையைக் குத்தகையாக எடுத்துச்செய்ய விரும்புவோர் 1952-ம் ஆ ஆனிமாதம் 7-ந் திகதி பகல் 10 மணிக்குமுன் கிராமச்சங்கத் தலைவருக்கு மனுப்பண்ணல் வேண்டும்.
2. மனுப்பண்ண விரும்புவோர் 1952-ம் ஆ ஆனிமாதம் 7-ந் திகதிக்குமுன் மேற்படி சங்கக் கந்தோரில் ஒவ்வொருவிகித டாப்புப் பத்திரத்திற்கும் ரூபா ஐம்பது கட்டிப் பெற்றுக்கொள்ளவேண்டும். சங்கத்தாற் கொடுக்கப்படும் விகித டாப்புப் பத்திரங்களிலேயே மனுச்செய்யதல் வேண்டும்.
3. ஒப்பந்தம் எழுதிய பின்னரே விகித டாப்புப் பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.
4. விகித டாப்புப் பத்திரங்கள் தெளிவாக மையினுல் நிரப்பப்படல் வேண்டும். அழித்தல்கள் திருத்தங்கள் உள்ள இடங்களில் விண்ணப்பக்காரனின் கைச்சாத்திடப்படல் வேண்டும்.
5. விகித டாப்புப்பத்திரம் கடதாசிக் கூட்டில் போட்டுக் கிராமச்சங்கத் தலைவர் ........... கிராமச்சங்கம், பண்டத்தரிப்பு என்ற விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும். கடதாசிக் கூட்டில் இடதுபக்க மேல் மூலையில் மேற்படி வேலையின் பெயரைக் குறிப்பிடல்வேண்டும்.
6. மேற்படி வேலையைப்பற்றிய விபரங்களைக் கிராமச்சங்கக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.
7. குத்தகைகாரனுய் நியமிக்கப்படுபவர் குறித்த வேலையைச் சரியாகவும் ஒழுங்காகவும் செய்வதற்குப் பிணையாய்க் கேள்வித்தொகையில் பத்திலொருபங்கு பணம் கட்டிய பின்னரே ஒப்பந்தம் எழுதப்படும். கிராமச்சங்கத்தலைவரால் குறிக்கப்பட்ட திகதிக்குள் ஒப்பந்தம் செய்யத் தவறின் குத்தகை மறுபேருக்குக் கொடுக்கப்படுவதோடு பிணைப் பணத்தில் ஒருபகுதி அல்லது முழுவதும் விகிதடாப்புப்பத்திரப் பணமும் பறிமுதலாக்கப்படும். அத்துடன் குற்றப்பட்ட குத்தகைகாரரின் இடாப்பில் அவர்பெயர் பதியப்படும்.
8. விகிதடாப்புப் பத்திரம் பெற்றோர் மனுப்பண்ணுதொழியின் விகித டாப்புப்பத்திரப் பணம் பறிமுதலாக்கப்படும்.
9. குத்தகையில் குறைந்த கேள்வியை அல்லது எந்தக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளக் கிராமச் சங்கம் கடமைப் படுத்திக்கொள்ளமாட்டாது.
10. அரசாங்கத்திற்கு அல்லது ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒப்பந்தமாய் வேலை செய்து பிழைப்பட்டவர்களின் மனுப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமட்டாது.
11. கேள்விப் பத்திரங்கள் வடபகுதி உதவி ஸ்தல அதிபரால் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கொந்திராத்துக்காரர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

சு. நாகமுத்து,
கிராமச்சங்கத்தலைவர்
கிராமச்சங்கக் கந்தோர்
பண்டத்தரிப்பு
திகதி 24-5-1952.

## ஆசிரியர் தேவை

மஸ்கேலியாக் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைக்கு, தலைமையாசிரியர் சம்பளத்துக்குரித்துடைய தலைமைஆசிரியர் தேவை. விரும்பினோர் கீழ்க் காணும் விலாசத்துக்குத் தாமதமில்லாது எழுதுக.

**T. A. J. Mathuranayagam,**
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 29-5-52

## வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாண முத்தேவநற்கருணை ஆதாய நிதிச்சங்க வருடாந்த பொதுக் கூட்டம் 1-6-52 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5-30 மணியளவில் யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் பாடசாலை மண்டபத்தில் வண. பி. ரி. ஜேம்ஸ், ஓ. எம். ஐ. கட்டளைச் சுவாமியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். அங்கத்தவர் அபிமானிகள் யாவரும் சமூகமளிக்கும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

S. மரியாம்பிள்ளை
(கௌரவ காரியதரிசி)

— உலகத்தில்முதன்முதலாகச் சினிமாஸ்ரூடியோபிரான்ஸ்தேசத்தில்தான் அமைக்கப்பட்டது. 1896-ம் ஆண்டு ஜோர்ஜ் மெலீஎன்பவர் மண்ட்றீல் சூபாய் எனுமிடத்தில் முதன்முறையாக ஸ்ரூடியோவொன்றை ஸ்தாபித்தார். அதுதான் உலகின் முதற்சினிமா ஸ்ரூடியோவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?

1. தற்காலத்திலே மனிதர் ஒருவரையொருவர் சந்திக்கும்வழக்கம் எந்தச்சாதியார்மத்தியில் முதன்முதலாகத் தோன்றியது?

இசிறவேலர்கள் மத்தியில் தான் முதன்முதலாகத் தோன்றியது. எகு என்பவர் ஜோனதாபைப்பார்த்து: என் இருதயம் உன்மட்டில் இருப்பது போல் உன் இருதயம் என்மட்டிலும் உண்டா? என்றுகேட்டார். அதற்கு அவர் 'ஆம்'என்று பதில்இறுத்தார். அப்படியானல் "கைகொடு" என்றார் எகு. (அரசர் 4-ம் புத்தகம் 10-ம் அதிகாரம் 15-ம் வசனம்.) இதிலிருந்து கைகுலுக்கும்வழக்கம் அவர்கள்மத்தியில் ஆரம்பமாயிற்று.

2. பன்னிருஅப்போஸ்தலர்களில் ஒருவரான அர்ச். அருளப்பரைப்பற்றிச் சுருக்கமாக யாதுசொல்லலாம்?

இவர் அர்ச். பெரியயாகப்பரின் சகோதரர். இந்த அர்ச்சியசிஷ்டரே யேசுக்கிறீஸ்துநாதரால் விசேஷவிதமாக நேசிக்கப்பட்ட சீஷர்என அறியப்படுகின்றார். திவ்வியகர்த்தர் மரணிக்கும்போது தம்முடையதிருத்தாயாரை இவருடையபாதுகாப்பில் ஒப்படைத்துப்போயினர். வேதசாட்சியாக மரணமடையாத ஒரேயொருஅப்போஸ்தலர் அர்ச். அருளப்பரே. டொமித்தியான் இவரைக் கொதிக்கின்ற எண்ணெய்க் கொப்பரைஒன்றில் எறியச்செய்தானெனினும் இவர் காயமின்றித் தப்பிக்கொண்டார். பின்னர் பற்மோஸ் தீவுக்கு நாடுகடத்தப்பட்டார். கி. பி. 100-ம் ஆண்டில் எபேசஸ்நகரிலே இயற்கையானமரணம் அடையலாயினர். ஓர்சுவிசேஷத்தையும், மூன்று நிருபங்களையும், காட்சியாகமத்தையும் இவர் எழுதியிருக்கின்றார்.

3. உலகின் மிகப்பெரியபடம் எங்கே இருக்கின்றது?

வெனிஸ்நகரிலே தோஜஸ்என்ற அரண்மனையில் இருக்கிறது. இது பரலோகத்தைப்பற்றி வரையப்பட்டுள்ளது. 84 அடிநீளமும், 34 அடி உயரமுமுடையது. 500 உருவங்களைக் கொண்டது.

4. உலகின் மிகச்சிறிய ஐந்துநாடுகள் எவை?

1. வத்திக்கான்—விஸ்தீரணம் 109 ஏக்கர். 2. மொனக்கோ—விஸ்தீரணம், 4 சதுரமைல். 3. சான்மறினே—விஸ்தீரணம், 38 சதுரமைல். 5. லீச்சென்ஸ்—விஸ்தீரணம் 60 சதுரமைல். 5. அன்டோரு—விஸ்தீரணம் 175 சதுரமைல்.

5. ஓர்ஆகாயவிமானத்தில் உலகத்தைச்சுற்றி முதன்முதலாகப் பறந்துசென்றவர்யார்?

விலேபோஸ்ற் எனப்பெயரிய ஒற்றைக்கண்ணரான அமெரிக்கரே.

6. இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலிலே 95 ஸ்தானங்களுக்குமாக இம்முறை அபேட்சகர்களாகப் போட்டியில் முற்பட்டவர்கள் எத்தனை பேர்?

303 பேர். 1947-ம் ஆண்டுத் தேர்தலில் அபேட்சகர்களாக முற்பட்டுநின்றவர்கள் 361. பேர். அதாவது இம்முறை 58 பேர் குறைந்துபோயினர்.

7. உலகில் தேயிலை அதிகமாகப் பாவிக்கும், அதாவது தேநீர்அதிகமாகப் பருகும் தேசங்கள்எவை?

பிரித்தானியும், அமெரிக்க்ஐக்கிய தேசமுமே. பிரித்தானியமக்கள் வருடம்ஒன்றுக்கு 46,400 கோடிறுத்தல் தேயிலை பாவிக்கிறார்கள். அடுத்தபடியாக அதிகமான தேயிலையைப் பாவிப்பது அமெரிக்கஐக்கியதேசம். என்றாலும் அமெரிக்கரைக்காட்டிலும் பிரித்தானியர்கள் வருடத்திலே நாலுமடங்குக்கு மேற்பட்டதேயிலையைப் பாவிக்கின்றார்கள்.

8. விடுதலைச் சிலை (Statue of Liberty) எங்கு நிறுவப்பட்டுள்ளது?

இது நியூயோர்க் துறைமுகத்திலுள்ள பெட்லோஸ் (Bedloes) தீவில் நிறுவப்பட்டுள்ளது. பெண்வடிவமான இச்சிலை ஒருகையில்சூளையும், மற்றக் கையில் புத்தகம்போன்ற கல்லையும் வைத்திருக்கின்றது. அக்கல்லில் அமெரிக்கஐக்கியதேசம் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலையடைந்ததிகதி குறிக்கப்பட்டுள்ளது. சிலையின் பாதத்திலிருந்து சூள்வரையுமுள்ள உயரம் 151 அடி. அதுநிற்கும் பீடத்தின் அடிமுதல் சூள்வரையுமுள்ள உயரம் 305 அடி 6 அங்குலம். சிலை சூள்உயர்த்திப்பிடித்திருக்கும்வலக்கை 42 அடிநீளம். இச்சிலை 1886-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 28-ம் திகதி திறக்கப்பட்டது. இதைச் செய்தவர் பிறடெறிக்ஆகஸ்ற்பரர்தோல்டி (Fredric August Barth oldi (1833-1904). இச்சிலை உள்ளே துவாரமுடையதாய் 3·32 அங்குல கனஉலோகத்தால் செய்யப்பட்டது. இதன்நிறை 225 தொன். இதனுள் கீழிருந்துமேல்வரைக்கும் மேலேஏறிச் செல்லப் படிகளுண்டு.

## பொதுவர்த்தமானம்

### சூரியன் அக்கினிப் பந்தா?

உலகம்ஆரம்பித்ததுமுதல் இதுவரை ஒருவானசாஸ்திர நிபுணராவது சூரியனைப்பற்றிய உண்மையை அறியவில்லைஎன்று சமீபத்திலே கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலையில் வானசாஸ்திரத்தில் எம். ஏ. பட்டம்பெற்றவரான கனம். பி. எச். பிரான்ஸிஸ் கூறுகிறார். சூரியன் ஒருகுளிர்ந்தகிரகம், அல்லது மிக்கசிதோஷ்ணமுள்ள பிரதேசம் என்றும், அது ஒருஅக்கினிப்பந்து அல்ல என்றும் அவர்தெரிவிக்கிறார். "சூரியன் ஒருஅக்கினிப்பந்து என்றுகூறுவது ஒருமூடநம்பிக்கை; பூமியானது ஆமையின்முதுகில் இருக்கிறதென்றும், அது தட்டையானதென்றும், சூரியன் இதைச்சுற்றி வருகிறதென்றும் கூறும்நம்பிக்கைக்கு இதைஒப்பிடலாம்" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

### எறும்புகளின் உபயோகம்

கமக்காரர் அருமையாகவளர்க்கும் பயிர்பச்சைகளைச் சிலபூச்சிகள் நாசமாக்கிவிடுகின்றன அல்லவா? அப்பூச்சிகளைஎதிர்க்க எறும்புகளை உபயோகிக்கலாமென்று இப்போதுகண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. கூடியசீக்கிரம் அவர்களுக்கு எறும்புகள் உதவிசெய்யத் தொடங்கிவிடும். எந்தவகையில் எறும்புகள் உதவும் என்றுகேட்கலாம். கலிபோர்ணியசர்வகலாசாலையின் ஆராய்ச்சிச்சாலையிலே பிராணி ஆராய்ச்சி நிபுணரான டக்றர் ஸ்ரான்லி பிளாண்டேர்ஸ்என்ற விஞ்ஞானி இது சம்பந்தமாக ஆராய்ச்சிசெய்துவருகிறார். பூச்சிகளையும், காளானையும் தின்னும் சிலவகைஎறும்புகள் உண்டு. இவைகளைக்கண்டுபிடித்து வளர்த்தால், நல்லபயன் உண்டுஎன்று இவர் சொல்லுகிறார். அத்தகைய எறும்புகளை வளர்க்கவும் அவர் முயன்றுவருகிறார். பயிர்பச்சைகளை அழிக்கும் பூச்சிகளை அடக்கிஒடுக்க எறும்புகளைப் பயன்படுத்தலாம் என்றகருத்து புதியதல்ல. 2,000 வருஷங்களுக்கு முன்னரே எலுமிச்சைவண்டுகளையும், கம்பளிப்பூச்சிகளையும் கட்டுப்படுத்த எறும்புகளைச் சீனர்கள் உபயோகித்திருக்கிறார்கள். மரங்களில் பொந்துவைக்கும் எறும்புகளை நிறையப் பிடித்துவிற்றுச் சம்பாதிக்கும் பணத்தைக்கொண்டு பலசீனர்கள் சீவனம் செய்கிறார்கள். எலுமிச்சையைப் பூச்சிகளிலிருந்து அந்தஎறும்புகள் பாதுகாக்கின்றன.

### பகலில் திரைக் காட்சி!

காலை அல்லது பிற்பகலில் சினிமா பார்க்கப்போனல் தியேற்றரிலுள்ள கதவுகளைஎல்லாம் சாத்தி உள்ளேஒளிவராமல் தடுத்துவிடுகிறார்கள். படமாளிகையில் இருள் கவிந்திருந்தால்தான் திரையில்தெளிவாக நாம் படத்தைப் பார்க்கலாம். ஆனல், இனிமேல் இந்தச் சிரமமில்லாமலே படம்பார்க்கலாம். பட்டப்பகலிலேயே யாதாமோர்தடையுமின்றிப் படம்காட்டுவதற்கான ஓர் புதுவகைத்திரையை இத்தாலிய எஞ்ஜினியரான அரில்லோ டி பெல்லாஎன்பவர் கண்டுபிடித்திருக்கிறார். அதனல் பட்டப்பகலில் அத்திரையின்மீது படத்தைஓடவிட்டுக் காட்டலாம். சமீபத்தில் மிலான்நகரில் இப்புதிய சினிமாத்திரையில் எஞ்ஜினியர் படத்தை ஓடவிட்டுப் பலருக்குக்காட்டியிருக்கிறார்.

### சூரியன் நிலையாக நிற்கவில்லை

சூரியன் ஓரேஇடத்தில் நிலையாக நிற்பதாயும், பூமியும், ஏனையகிரகங்களும் அதைச்சுற்றிவருவதாகவும் நம்மில்பலர் நினைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனல், உண்மையில் சூரியனும் இயங்கிக்கொண்டேயிருக்கிறது. தனது உடன்கிரகங்களையும் இழுத்துக்கொண்டு செக்கனுக்கு 12 மைல்வீதம் வேகாஎன்றநட்சத்திரம் இருக்கும் திசையாக அதிவேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. பால்வீதி மண்டலத்தை 20 கோடிவருடத்திற்கு ஒருதடவை சூரியன்சுற்றுகிறது.

### தாலாட்டும் தெலிபோன்

வீடுகளிலே குழந்தைகள்அழுதால் தாய்மார்அவற்றைத் தொட்டிகளிலிட்டு "ஆராரோ" என்று தாலாட்டுப்பாடித் தூங்கவைக்கிறார்கள். ஆனல், நியூயோர்க் நகரிலே வெஸ்ற்செஸ்றர் கவுண்ரிப்பகுதியில் குழந்தைகளைத் தாலாட்டித் தூங்கவைக்கத் தாய்மார் சிரமப்படவேண்டியதில்லை. குழந்தைகள் தூங்கமறுத்தால், உடனே அங்குள்ள தெலிபோன்மூலம் "தாலாட்டு—மனித"னுடன் பேசுகிறார்கள். அவ்வளவுதான். பின்பு அந்தப் 'போனை' குழந்தையின் காதுக்கருகில் வைத்துவிடுகிறார்கள். 'தாலாட்டு—மனிதன்' தெலிபோன்மூலம் தாலாட்டுப்பாட்டைப்பாடிக் குழந்தையைத் தூங்கவைத்துவிடுகிறான். இதற்கெனப் பிரத்தியேகமாய்த் தாய்மாரிடமிருந்து சலார் அறவிடப்படுவதில்லை. இதற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள 'சேர்வீஸ்' மூலம் இந்தவசதி இலவசமாக அக்குள்ளதாய்மாருக்குக் கிடைத்துள்ளது.

### மதுவெறிக்கு மருந்து

மதுபானம் பாவிப்பவர்களை அதிலிருந்து விடுதலையளிக்கும் மருந்து ஒன்றை ஜப்பானிலுள்ள "நிப்பன் மதுவிலக்குச்சங்கம்" கண்டுபிடித்துள்ளதாகச் செய்திகிடைத்திருக்கிறது. ரோக்கியோநகர பத்திரிகைகளுக்குக் கிடைத்த செய்தியின்படி, இந்தமருந்து எத்தகைய சுவையுமற்ற ஒரு தூள் மருந்தாகும். இதை உணவோடு அல்லது ஏதாவது பானத்தோடு சேர்த்து உட்கொண்டுவிட்டால் மதுபானம் அருந்த வேண்டுமென்ற உணர்ச்சியே இல்லாமல் போய்விடுகிறதாம். இவ்வருடப் பிற்பகுதியிலே பரீஸ்நகரிலே நடைபெறவிருக்கும் உலகமதுவிலக்கு மகாநாடொன்றில் பரீட்சார்த்தமாக உபயோகித்துக் காட்டப்பெற்றபின் இது உலகமெங்கும் விற்பனவுக்குக் கிடைக்குமென்று தெரியவருகிறது.

### முதலாம் நம்பர் விரோதி

"கம்யூனிஸம் என்பது இஸ்லாமிய நாடுகளின் முதலாம்நம்பர் சத்துரு" என்று ஒருபாகிஸ்தான் பத்திரிகை சென்ற 21-ந்திகதியன்று எழுதி வர்ணித்திருக்கிறது. பாகிஸ்தானின் மிகப்பழைய பத்திரிகையான "சிவில் அன்ட் மிலிற்றறி கெசற்" எழுதியிருக்கும் ஒரு தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறது: "ஆண்டவன் மீது நம்பிக்கை வைப்பதுதான் இஸ்லாமிய வாழ்க்கையின் மூலைக்கல்லாகும். ஆண்டவனை மறுக்கும் கம்யூனிஸத்தில் சில நல்லஅம்சங்கள் இருப்பதாகப் பேசுகிறவர்கள் இஸ்லாமிய நாடான பாகிஸ்தானில் இன்னும்இருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. வாழ்க்கையின் சீவ அம்சங்களென்று இஸ்லாம் கருதும் எல்லா அம்சங்களையும் கம்யூனிஸம் நிர்மூலம் செய்கிறது"

## நானுசங்கதிகள்

— இற்றைக்கு 25 வருடங்களின் முன்னர் வைகாசிமாதம் 21-ந் திகதியன்று கர்ணல் லிண்ட்பேர்க்எனும் போனவிமானி நியூயோக்கிலிருந்து அத்திலாந்திச் சமுத்திரத்திற்கு மேலாகப் பரீஸ்நகருக்குப் பறந்துசென்று சரித்திரப்பிரசித்திபெற்ற தமது ஆகாயப் பிரயாணத்தைமுடித்தார். இதற்கென அவருக்கு ஏறக்குறைய இரு தினங்கள் பிடித்தன. ஆனல், 25 வருடங்களுக்குப்பின் இப்போது அத்திலாந்திக்சமுத்திரத்திற்குமேலாகத் தினமும் சராசரிவீதமாய் ஆண்களும், பெண்களும், பிள்ளைகளுமாக 1,800 பேர் ஆகாயப் பிரயாண விமானங்கள் மூலம் பிரயாணஞ்செய்துவருகிறார்கள்.

— இற்றைக்கு 25 வருடங்களின் முன் அதாவது 1927-ம் ஆண்டு கர்ணல் லிண்ட்பேர்க்என்னும் ஆகாயவிமானி அத்திலாந்திக்சமுத்திரத்திற்கு மேலாய் ஓர்ஆகாயவிமானத்தில் முதன்முதலாகப் பறந்ததுமுதல் இதுவரை 15 லட்சம்பேர் ரிக்கெற்பெற்று ஆகாய விமானங்களில் அந்தச்சமுத்திரத்திற்குமேலாகப் பிரயாணஞ் செய்திருக்கிறார்கள். இவர்களைத்தவிரப் பிரத்தியேகபிரயாணிகளும், இராணுவவீரர்களுமாகப் பதினயிரக்கணக்கானேர் அவ்வாறுபயணஞ்செய்திருக்கிறார்கள்.

— ஸ்பெயினின் தலைப்பட்டணமாகிய மதிரித்நகரிலே வருகிறஆவணி மாதத்தில் ஐரோப்பிய பீர்க்குடிகாரரின் குடிப்போட்டியொன்று நடைபெறவிருக்கிறது. பிரித்தானி, பெல்ஜியம், ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின் முதலாம்நாடுகளைச் சேர்ந்த பீர்க்குடிகாரர் இப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கின்றனர். 5,000 பீர்க்குடிகாரரைக்கொண்ட ஸ்பானியசங்கம்ஒன்றிலேயே இந்தப்போட்டி நடத்தப்படவிருக்கிறது.

— அமெரிக்க ஐக்கியதேசத்திலே வியாபாரசம்பந்தமாகக் கடந்த 33 வருடங்களிலும் இறக்குமதிப்பொருட்களைக் காட்டிலும் ஏற்றுமதிப்பொருட்களே வெகுவாக அதிகரித்துவந்திருக்கின்றனவாம். அதாவது இந்த 33 வருடங்களிலும் இறக்குமதிப்பொருட்களின் விலையைக்காட்டிலும் ஏற்றுமதிப் பொருட்களின்விலை 8,000 கோடிடலரால் அதிகரித்திருக்கிறது.

— இத்தாலியிலே வியாறெக்கியோ எனுமிடத்திலுள்ள அர்ச். அந்திரேயார் கோவில் பங்குவிசாரணைக்குரவராயிருந்து பரமபதம்அடைந்தவரான ஆசா. அன்ரோனி மரியா புச்சி சுவாமியார் வருகிறஆவணி 22-ந்திகதி முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டப்படவிருக்கிறாரெனச் செய்திகிடைத்திருக்கிறது.

— இத்தாலியிலே நேப்பிள்ஸ்நகர் அதிமேற்றிராணியாரா யிருந்துவந்த கருதினல் அஸ்காலேசிஆண்டவர் நெடுநாள் நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற 11-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை தமது 80-ம்வயசில் காலஞ்செல்லலாயினர். இவர்மரணத்தோடு தற்போது திருச்சபையிலுள்ள கருதினல்மார் 47 பேர். இவர்களில் இத்தாலியர் 16 பேரே.

— இரும்புத்திரைநாடுகளில் ஒன்றான அல்பேனியநாட்டு அரசாங்கம் தனதுநாட்டிலுள்ள ரோமான்கத்தோலிக்க குருமாருக்கும், வத்திக்கானுக்குமிடையே இருந்துவந்த தொடர்பைத் துண்டித்துவிட்டிருப்பதாகச் சென்ற சனிக்கிழமை வத்திக்கானிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

—அமெரிக்காவின் அடுத்த ஜனதிபதியாக ஜெனறல் டுவைற் ஈசனேவர்அவர்களே தெரியப்படுவாரெனப் பிறநாட்டுக்கருமங்களிலே அமெரிக்க குடியரசுக்கட்சி ஆலோசகரான திரு. ஜோண் டல்லெஸ் அவர்கள் முன்னதாகவே உணர்ந்து சென்றவியாழக்கிழமை அயர்லாந்தில் தங்கியிருந்தபோது அறிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அன்புச் சோதரங்களே!

தினமும் பாடசாலை ஆரம்பமாகும் போது உங்கள் ஆசிரியருடன் சேர்ந்து நீங்கள் வழமையில் சொல்லிவரும் செபம் என்ன? திவ்விய இஸ்பிரீத்துச் சாந்துவே தேவரீர் எழுந்தருளி வாரும்... என்ற அருமையான செபம் அல்லவா? இந்தச் செபத்தினால் இஸ்பிரீத்துச் சாந்துவின் உதவியை இரந்து கொண்டு பாடசாலையிலே உங்கள் நாளாந்த படிப்பை நீங்கள் தொடக்குகிறீர்கள். திவ்விய இஸ்பிரீத்துச்சாந்து யார்? அர்ச். தமதிரீத்துவத்தின் மூன்றும் ஆளாகிய சர்வேசுரன். இருள் கொண்ட மேகம் சூரிய கதிர்களை மறைத்து அதன் ஒளியை மங்கச் செய்வது போல் அறியாமை என்னும் அந்தகாரமும், அதாவது இருண்ட மேகமும் நமது புத்தியை மங்கச் செய்கின்றது. அதனால் ஞானச் சுடர் விட்டு ஒளிரும் திவ்விய இஸ்பிரீத்துச் சாந்துவின் விசேஷ ஒளி நமக்கு அவசியம். அவர் ஞானத்துக்கு இருப்பிடம் ஆனவர். நல்ல ஏவுதல்களை நமக்கு அருளுகிறவர். இந்த உலக சீவியத்தில் அவரது திவ்விய வரங்கள் நமக்கு அவசியம். அவைகள்: ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பத்தி, தேவபயம் என்பன. "உமது ஞானம் இல்லாதாகில் தவறிப் போவோம்" என்று இஸ்பிரீத்துச் சாந்துவின் கீதத்தில் நாம் பாடி வருகிறோம் அல்லவா? அவர் தரித்திரருடைய பிதா. நற்கொடைகளைக் கொடுக்கிறவர். இருதயங்களின் பிரகாசம் ஆனவர். ஆதலால் அன்பான சகோதரங்களே! இஸ்பிரீத்துச் சாந்து சர்வேசுரனை எப்போதும் மன்றாடி வாருங்கள். அவருடைய செபத்தைப் பத்தியாகச் சொல்லி வாருங்கள். பரலோகத்தில் இருந்து அவருடைய திவ்விய பிரகாசத்தின் கதிர்கள் உங்கள் மேல் என்றும் இறங்குவதாக!

உங்கள் அன்புள்ள
அண்ணா

## சேவை......?

நாட்டின் தியாகிகள் என்ற தலையங்கத்தின்கீழ் வருங்கால சரித்திரத்தில் தமதுபெயர்களும் வரையப்பட வேண்டுமென்று ஆவல்கொண்டு, மேடைகளில்நின்று ஏழைகளைக் காப்போமென்று சொல்மாரி பொழிந்து, நாட்டின் சேவையென நயம்பட உரைத்து, றெயில் தண்டவாளங்களைப் பெயர்த்தும், ஏழைகளின் பயிர்களை நாசம்செய்தும் இறுமாந்து திரிந்த ஓர் சோரக்கும்பலின் தலைவனது மகளே ராஜம்.

ராஜம் சிறுவயதிலேயே தாயை இழந்தாள். பிறப்பிலேயே ஏழைக் குடும்பம், அதிலும் தாயையிழந்த ராஜம் ஆவையிழந்த கன்றெனை அனாதையானாள். தந்தையும் மகளைத் தக்கபடி காப்பாற்ற முன்வரவில்லை. அனாதை ராஜத்தை அவளது தூரஉறவினளான ஓர் ஏழைப்பாட்டி வளர்த்து வந்தாள். பாட்டி தெய்வபக்தி மிக்கவள். நீதியை நிலைநாட்ட விரும்புபவள். ஆனபடியால் ராஜத்தை ஓர் கத்தோலிக்க பாடசாலையில் படிக்க வைத்தாள். ராஜமும் குப்பையில் கிடந்த குண்டுமணிபோல், முரட்டுத் தந்தையின் மகளானாலும் நல்ல முன்மாதிரியாக வளர்ந்து வந்தாள். பாட்டி அவளை உண்மையான கிறீஸ்தவளாக்க அரும்பாடு பட்டாள். பாட்டியின் நோக்கம் பலித்தது. ராஜம் பாடசாலையிலும், பாட்டியிடமும் கிறீஸ்துநாதரின் பிரசங்கங்களையும், திருப்பாடுகளையும் நன்குகற்றாள். செப தபங்களைச் சிறுவயதிலிருந்தே பாட்டியின் ஊக்கத்தால் தவறாது செய்துவந்தாள். வாரத்தில் ஒருமுறை பாவசங்கீர்த்தனம் செய்வாள். வைகறையில் பூசைகாண்பாள். இவைகளால் அவள்மனம் பக்குவம் அடைந்தது. பரமபிதாவே தன்னைக் காப்பவரென உள்ளன்போடு அவரைப் பக்திசெய்து வந்தாள். தந்தையின் செயலை வெறுத்தாள். அவரின் மிரட்டலுக்கு அவள் அஞ்சவில்லை. பொய்யை வெறுத்தாள், புனிதத்தை வளர்த்தாள், உள்ளன்போடு யேசுவை வணங்கினாள். இப்படியாகப் பரமனைத் துணையென நம்பிய ராஜத்தைப் பாட்டியும் விட்டகன்று பரமனை அடைந்தாள். ராஜம் கதிகலங்கினாள். அனாதையான ராஜம் ஓர் கன்னியாஸ்திரி மடத்தைச் சரணடைந்து உத்தம கன்னியாஸ்திரியானாள்.

மகள் கன்னியாஸ்திரியான செய்தியை அறிந்த மதியிலாத் தந்தை சினங்கொண்டு மகளைக் காணச்சென்றான். மடத்தில் மகள் சில ஏழைப் பிணியாளரையும், சில அனாதைப் பிள்ளைகளையும் வைத்துப் பராமரிப்பதைக் கண்டான். மகளைக் கண்டுபேச ஆவல்கொண்ட தந்தை அவளின்பால் சென்று அவள் கன்னியாஸ்திரியாகக் காரணம் யாதெனக் கொஞ்சம் கடுமையான குரலில் கேட்டான். அதற்கு அவள், பாவிகள் பரமண்டலத்தை எட்டியும் பார்க்க முடியாதென எடுத்துக் கூறினாள். யேசுநாதரின் பிரசங்கங்களை விரித்துக் கூறினாள். நாட்டின்சேவை ஏழைகளை வருத்தஅல்ல என்பதை விளக்கிக் காட்டினாள். இவற்றைக் கேட்ட தந்தை தன் குற்றங்களை நினைந்து கண்ணீர் விட்டான். மகளின் தேச சேவையையும், தனது மட்டித்தனத்தையுங் கண்டு வெட்கித் தலைகுனிந்து அப்பாற்சென்றான். நேராகக் கோவிலை அடைந்து குருவானவரைக் கண்டு பாவசங்கீர்த்தனம் செய்தான். தன்பாவங்களைப் பொறுக்குமாறு அல்லும்பகலும் பரமபிதாவை மன்றாடிவந்தான்.

இன்று ராஜம் பரமசேவையுடன் பாமரமக்களின் அறியாமையைப் போக்கும் அரியகதை, கட்டுரைகளைப் பலபத்திரிகைகளின் மூலம் வெளியாக்கியும் வருகின்றாள். நாட்டின் நலனில் பாடுபட்டுச் சேவை செய்கின்றாள். இவளை உலகம்போற்றுகின்றது. பரமன் பாதுகாக்கின்றார். இதுதான் தேச சேவையும் தேவநேசமுமாகும்.

ஆர். எஸ். எஸ். நாதன்

## விளையாட்டு வினையாய் முடிந்தது

இராணியும், இராசுவும் இணைபிரியா நண்பர்கள். அவர்களின் பெற்றோர் பிள்ளைகளின் நட்பைக்கண்டு பெருமிதம் கொண்டனர். பாடசாலைக்குச் செல்லும்போதும், கோவிலுக்குச்செல்லும்போதும், விளையாடும்பொழுதும் இவர்கள் இருவரையும் தனித்து நாம் காணமுடியாது. சுருங்கச்சொன்னால் இருவரும் ஒருவரை ஒருவர் ஒருநாளும் பிரிந்ததில்லை.

இராசு மிகவும் சமர்த்தன். குறும்புகள் செய்வதில் அவனைவிட அந்த ஊரிலேயே ஒருவருமில்லை. பிறரின் மனத்தைக் கலக்கி மகிழ்வுறுவான். இறுதியில் அவர்களையும் மகிழவைப்பான். ஆனால், அவன் நேர்மை மிக்கவன். பாடசாலையில் பிள்ளைகளின் புத்தகம், பென்சில், பேனா போன்ற பொருட்களை எடுத்து ஒளித்து விடுவான். அவர்கள் எங்கும் தேடி இளைத்தபின் "கண்ணை மூடிக்கொண்டு கடவுளை வேண்டுங்கள்; கட்டாயம் கை கூடும்" என்பான். அவர்கள் கண்திறக்கும் போது புத்தகம் பென்சில் பேனா அவர்கள்முன் இருக்கும்.

குறும்புக்காரனாய் இருந்தாலும் குணசீலனாயும், கெட்டிக்காரனாயும் இருந்தபடியால் ஆசிரியரும், பிள்ளைகளும் இராசுவை இன்புற நேசித்தனர். இராணியும் இராசுவைப்போல் குறும்புகள்செய்ய ஆசைகொண்டாள்.

ஒருநாள் பெண்பிள்ளைகள் எல்லோரும் விளையாடும்போது குமாரிஎன்பவளின் தங்கமாலையை இராணிஎடுத்து ஒளித்துவிட்டாள். விளையாட்டுமுடிந்ததும் குமாரி மாலையைப் பார்த்தாள். காணவில்லை. அவளுக்கு அழுகைவந்தது. அழுதபடியே எங்கும் தேடினாள். மற்றப்பிள்ளைகளும் மாலையைத் தேடுவதில் முனைந்தனர். இராசுவிடம் இராணி நடந்ததைச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

"எல்லோரும் கண்ணை மூடிக்கொண்டு மாதாவை வேண்டுங்கள்; மாலை கிடைக்கும்" என்றான் இராசு. எல்லோரும் கண்ணைமூடினர். இராணியும் இராசுவும் மாலைவைத்த இடத்தைப் போய்ப் பார்த்தனர். அங்கே மாலையில்லை. "மாலையைக் காணவில்லையே" என்று மனமுடைந்து கதறினாள் இராணி. பிள்ளைகள் கண்விழித்தனர். ஆனால், மாலை வரவில்லை.

குமாரி அழுதபடியே வீடுசென்று, "அம்மா! இராசு என்மாலையைத் திருடிவிட்டான்" என்று முறையிட்டாள். உடனே குமாரியின் தாயாருக்கும், இராசுவின் தாயாருக்கும் சண்டை மூண்டது. பெண்கள் சண்டையென்றால் பேச்சுக்கு என்னகுறைவு? அப்பொழுது அங்கேவந்த இராசு "அம்மா! நான் குமாரியின்மாலையை எடுத்தது உண்மை. ஆனால், அது எங்கோ தொலைந்துவிட்டது" என்றான். இராணியில் அவன் கொண்ட அன்பே அவனை அவ்வாறுசொல்லத் தூண்டிற்று. இராசுவிற்குச் சவுக்கினால் அடித்தாள் அவன் தாயார். இதைப்பார்த்து இராணி பதறினாள்.

"அந்தக்கள்வன் இராசுவுடன் நீ சேரக்கூடாது; சேர்ந்தால் உன் கால்களை ஒடித்து விடுவோம்" என்றனர் இராணியின் பெற்றோர். இதைக் கேட்ட அவள்மனம் என்னபாடு படும் என்பதை நீங்களே அறிந்துகொள்வீர்கள். யார் கள்வன்? என்பது அவளுக்கல்லவா தெரியும்?

அருமைச் சகோதரர்களே! சகோதரிகளே! விளையாட்டால் வந்தவினையைப் பார்த்தீர்களா? "களவெடுக்காதே" என்பது கற்பனைகளுள் ஒன்று அல்லவா? விளையாட்டாகத்தொடங்கி இறுதியில் அது வினையாகவேமுடியும். நட்பைப் பிரித்துவிடும். நல்ல பெயரை நாசமாக்கும். துன்பம் மிகக்கொடுக்கும். ஆதலால் நாம் விளையாட்டுக்கும் களவெடுக்கக் கற்றுக்கொள்ளுதல் ஆகாது.

உண்மைநண்பரை ஆண்டவர் ஒருபோதும் பிரிக்கமாட்டார். அப்படிப் பிரித்தால் நாமும் அல்லவா துக்கப்பட நேரும். இராணி கண்டவழி ஒன்றே ஒன்றுதான். எந்நேரமும் ஆண்டவரை மன்றாடினாள். "மரியாயின் திரு உதரக்கனியே! உன் மகள் வேண்டுகின்றேன்; மறைத்துவைத்த மாலை எங்கே மறைந்தது? ஒருபாவமும் அறியாத இராசுவைத் தண்டிக்கிறார்களே! எங்களை மீண்டும் ஒன்றுசேரச் செய்யும்" என்று ஓயாது வேண்டினாள். அவள் வேண்டுதல் பலித்தது. பூசை அறையைவிட்டு வெளிவந்த இராணி கையில் மாலையுடன் குமாரி நிற்பதைக் கண்டு அதிசயமுற்றாள்.

"இராணி! வா, இராசுவிடம் செல்வோம். இராசு குற்றம் அற்றவன்; அவனை வீணாகத் தண்டிக்கிறார்கள்" என்று கத்தினாள் குமாரி. இருவரும் இராசுவீட்டை நோக்கிஓடினர்.

சோர்வுடன் சுவரில்மாட்டியிருந்த மாதாசுரூபத்தைப் பார்த்துக் கொண்டிருந்த இராசு இராணியின்குரல் கேட்டுத் திரும்பினான். குமாரியின் கழுத்தில் மாலையைக் கண்டதும் "ஆ! மாலை!! எப்படிக் கிடைத்தது?" என்று உரக்கக் கத்திவிட்டான்.

சிறிதுநேரத்தில் இராசுவின் வீடு விருந்தினர் இல்லம்போல் மாறியது. இராணியின் பெற்றோர் குமாரியின் தாயார் யாவரும்கூடி மாலைவந்த கதையைக் குமாரி சொல்லக்கேட்டு அதிசயமுற்றனர்.

"இராசு விளையாட்டாக எடுத்து ஒளித்த மாலையைப் பொந்தில் இருந்த சுண்டெலியும் விளையாட்டாக எடுத்துக்கொண்டு ஓடியது. ஆனால், அதன் விளையாட்டு உயிருக்கே உலைவைத்துவிட்டதாம். எங்களுடைய உபாத்தியாயர்வீட்டுப் பூனை அதைப்பிடித்துவிட்டதாம். பூனையின்வாயில் எலி. எலியின்வாயில் மாலை. இதைக்கண்ட உபாத்தியாயர் பூனையைப் பிடித்து மாலையை எடுத்தாராம். இன்று பாடசாலையில் இதைக்கொண்டுவந்தார். இராசு! உன்னைப் பாராட்டினார் அவர். நீங்கள் இருவரும் பாடசாலைக்கு வராமையால் அவர்மிகவும் துக்கப்பட்டார். என்னை மன்னித்துவிடு இராசு" என்று முடித்தாள் குமாரி.

அந்தப்பூனைக்கு என்ன உபகாரம் கொடுக்கலாம்? அதுஅல்லவா இராசுவைக் காப்பாற்றியது என்றாள் குமாரியின் தாயார்.

"அதுதான் எலியைத் தின்றுவிட்டதே" என்றாள் இராணியின் தாயார்.

"நாம்செய்த தப்புக்காக நாமெல்லோரும் இராசுவுக்கு ஏதாவது கொடுக்கவேண்டும் அம்மா!" என்றாள் குமாரி களிப்புடன்.

"நம்எல்லோரது அன்பையும் கொடுப்போம்" என்றாள் இராணி. இராசுவைப் பார்த்துப் புன்னகை செய்தபடி "அது நல்லதீர்ப்பு" என்றனர் யாவரும். "தீர்ப்பளித்தவருக்கு என்ன வெகுமதி" என்று இராசுகேட்டான். "உனது அன்பு எனக்குத்தானே" என்று கூத்தாடினாள் இராணி.

உண்மையாக மாலையை எடுத்து ஒளித்தவள் இராணி என்பது யாருக்கும் தெரியாது. நீங்கள் இதை அவர்களுக்குச் சொல்லிவிடாதீர்கள்.

—கரம்

## ருஷியாவில் தொழிலாளர்

ருஷிய தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உலகிலேயே மிகவும்உயர்ந்ததென்று ருஷியர்கள் செய்யும்பிரசாரம் ஒருபெரிய "ஏமாற்று" வேலை என்று திரு. கியாமின் அவர்கள் சென்ற 22-ந் திகதி றங்கூன்நகரிலே கூறியிருக்கின்றார். மஸ்கோவில் நடைபெற்ற பொருளாதார மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு பர்மிய தூதுக்கோஷ்டியின் உபதலைவராக ருஷியா சென்றிருந்த திரு. கியாமின் அவர்கள் சமீபத்தில் பர்மாவுக்குத் திரும்பினார். ஆனால், தொழிலாளர்களின் வாழ்க்கைநிலையை உயர்த்த ருஷிய அதிகாரிகள் பாடுபட்டு வருகிறார்களென்று கூறிய திரு. கியாமின் அவர்கள், ருஷியதொழிலாளர்கள் வேலைசெய்யும் நேரத்திற்கே சம்பளம் வாங்குகிறார்களென்றும், அவர்களுடைய தேவைகளுக்குத் தகுந்தவாறு சம்பளம் கொடுக்கப்படுவதில்லையென்றும் கூறினார். அங்ஙனமாக, ருஷியா தொழிலாளர்களின் சுவர்க்கலோகம் என்று புழுகிக் கொள்ளுகின்றனரே.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த ஊர்துநாயகி, கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார், தவறாது அனுகூலந்தரும் அர்ச். ரீத்தம்மாள் ஆகிய இவர்களிடம் நாங்கள் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றோம். இவர்களின்நாமங்கள் என்றும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

மாதகல் பே. பிலிப் மரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த உணவுகள்

எண்பது லட்சம் மக்கள் சாப்பிடுவதற்கு எல்லாவிதமான உணவுகளும் இலங்கைக்கு அவசரமாகத்தேவைப்படுகின்றன. பண்படுத்தக்கூடிய ஒவ்வொரு அங்குலநிலமும் உணவு உதவல் வேண்டும். வெங்காயம், மிளகாய், இலைகறிகள், காய்கறிகள், கிழங்குகள், பழவகைகள் முதலியவற்றை உங்கள் தோட்டத்தில் பயிர்செய்யுங்கள். இடவசதி இருக்குமெனில் நல்லினக் கால்நடைகள், கோழிகள், தேனீக்கள் முதலியவற்றை வளருங்கள்—பால், முட்டைகள், தேன் முதலியன சிறந்தஉணவுகளாகும். ஆரோக்கியமுள்ள பிரசைகளை இலங்கை வேண்டிநிற்கின்றது.

சிறந்த சுகாதாரத்துக்கு நீங்கள் சரியான உணவுகளை உட்கொள்ளவேண்டும்.—நானாவித உணவே சிறந்தது. அரிசிச்சாதத்தோடுகூடக் கோதுமைமா உணவையும் சாப்பிடுங்கள்.—அரிசியாலான சாப்பாட்டைவிட அரிசி, கோதுமை மா முதலியவற்றாலான சாப்பாடே சிறந்தது.

உங்கள் அன்றாடச்சாப்பாடு கீழ்க்காணும் உணவுப்பொருட்களைக் கொண்டதாக இருக்கட்டும். பருப்புகள் (அவரை அல்லது பயறு அல்லது கடலை) வத்தாளக்கிழங்கும், இதர கிழங்குவகைகளும், தேங்காய். இவைகள் எல்லாவற்றிற்கும்மேலாகப் பலரகப் போஷணையுள்ள காய்கறிகள், இலைகள், பழவகைகள். அவையாவன:-

காய்கறிகள்: தக்காளி, பயற்றங்காய், வெண்டிக்காய், சாம்பல்வாழைக்காய், முருங்கைக்காய், பாகற்காய், ஈரப்பலாக்காய், பலாக்காய்.

இலைகள்: அகத்தி, கங்குங், கொயிலை, பொன்னாங்காணி, பசளி, செங்கீரை, வல்லாரை.

பழவகைகள்: பப்பாளி, தோடம்பழம், நெல்லி, அம்பரங்காய், வாழைப்பழம், பாஷன்பழம், நாரத்தை, கொய்யாப்பழம், முந்திரிக்கொட்டைப்பழம், மாம்பழம்.

சிசுக்கள், இளம் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும்தாய்மார் ஆகியோருக்கு ஏராளமான பால் தேவைப்படுகிறது. முட்டைகள், நெத்தலி, சிறியமீன்முதலியன வளரும் குழந்தைகளுக்கு நல்லவை. புலால் உண்ணுதார் தினமும் பால் அல்லது தயிர் அருந்தவேண்டும். உணவை வீணாக்காதீர்கள்—எக்காலத்தும் உணவுக்கு இவ்வளவு அருமை ஏற்பட்டதில்லை.

சக்தியூட்டும் உணவுகள்: எந்த விதமான வேலையைச்செய்வதற்கும் உங்களுக்குச் சக்திவேண்டும். உதாரணமாக, உங்கள் சுவாசப்பை விரிந்து கொடுக்கும்பொழுதும், உங்கள் இருதயம் இரத்தத்தை உடம்பெங்கும் செலுத்தும் பொழுதும், நீங்கள் உங்கள் கால்களை அல்லது கைகளை அசைக்கும்பொழுதும், நீங்கள் உட்கார்ந்து அல்லது நின்றுகொண்டிருக்கும்பொழுதும் உங்களுக்குச் சக்தி தேவைப்படுகிறது. தசைநார் வன்மைக்கு மாற்றப்படக்கூடிய உணவை நீங்கள் பெற்றுகவேண்டும். உங்கள் நாளாந்த சக்திக்குத்தேவையான சில உணவுகள் இதோ இருக்கின்றன:

அரிசி, கோதுமை மா, சோளம், குரக்கன், பருப்பு, கடலை, தேங்காய், எள், முந்திரிக்கொட்டை, பலாக்கொட்டை, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, சீனி, கருப்பட்டி, பாணி, தேன், வெண்ணெய், கிழங்குவகைகள், முதலியன மிகவும் மலிவான அல்லது சர்வசாதாரணமான சக்தியூட்டும் உணவுகளாகும்.

புரதச்சத்துள்ள உணவுகள்:

உங்கள் வாழ்க்கைமுழுவதும் தினந்தோறும் உங்கள் இழையத்தில் ஒரு பகுதி செலவாகின்றது. இதற்கு ஈடுசெய்யப் புதிய இழையங்களை வளர்ப்பதற்காக உடம்பைவளர்க்கும் சத்துள்ள உணவுகளை நீங்கள் உட்கொள்ளவேண்டும். இன்றேல் உங்கள் உடல் மெலிந்துவிடும்.

உங்கள் பிள்ளைகள் வளர்ந்துகொண்டே இருக்கிறார்கள். வளர்வதற்கு மேலதிகமான இழையங்கள் வேண்டும். எனவே புதியஇழையங்களை உற்பத்திசெய்யக்கூடிய சத்துள்ள உணவுகள் இளைஞர்களுக்கும் வயதுவந்தவர்களுக்கும் தேவைப்படுகின்றன. இப்படிப்பட்ட சத்துக்கள் பல்வேறு உணவுகளில் காணப்படுகின்றன. சிசுக்கள் அவற்றைப் பாலிலிருந்து பெற்றுக்கொள்ளுகிறார்கள. குழந்தைகளும், வயதுவந்தவர்களும் அவற்றைப் பாலிலிருந்துமட்டுமே அல்லாமல் கீழ்க்காணும் உணவுகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளமுடியும்.

அரிசி, கோதுமைமா, குரக்கன், சோளம், பருப்பு, கடலை, சோயா அவரை, முந்திரிக்கொட்டை, மீன், இறால், மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றிஇறைச்சி, முட்டைகள், முருங்கைக்காய்.

சுண்ணச்சத்துள்ள உணவுகள்:

உங்கள் எலும்புகளினதும் பற்களினதும் பெரும்பகுதி சுண்ணச்சத்தாலானது. சுண்ணச்சத்துக் குறைவாகஉள்ள உணவைஉட்கொள்ளும் குழந்தைகள் வளர்ச்சியற்றுக் காணப்படுகிறார்கள். கர்ப்பிணிகளுக்கு மேலதிகமான சுண்ணச்சத்துத் தேவைப்படுகின்றது. இது கர்ப்பத்திலுள்ள சிசுவின் எலும்புகளை வளர்க்கஉதவுகிறது. எமது சராசரி உணவில் சுண்ணச்சத்துக் குறிப்பிடத்தக்கவிதமாகக் குறைந்திருக்கிறது. எனவேநீங்கள் உங்களுக்குத் தேவையான சுண்ணச்சத்து முழுவதையும் தரக்கூடிய உணவைத்தெரிந்தெடுக்க வேண்டும். பின்வரும்சாதாரண உணவுகளிலிருந்து நீங்கள் உங்களுக்குத் தேவையானவற்றைத் தெரிந்தெடுக்கலாம்: பால், தயிர், குரக்கன், சிறிய மீன், நண்டு, எள், அகத்தி, வல்லாரை, துவரை, முருங்கைஇலை.

அரசினரால் வெளியிடப்பெற்ற தேசீயஉணவுப் பிரசுரத்திலிருந்து அனுவதிக்கப்பட்டது.



## மரண அறிவித்தல்

பிறப்பு: 14—4—1947
இறப்பு: 31—3—1952

யாழ்ப்பாணம், அர்ச். கொஞ்சேஞ்சிமாதாகோவில் 9-ம்நோவனைமூப்பராய்ப் பலவருடகாலம் இருந்தவரும், பலநாடகங்களின் அண்ணவியாரும், இற்றைக்குப் 19 வருடங்களின்முன் காலஞ்சென்றவருமான திரு. பி. சலமோன்அவர்களின் சிரேஷ்டபுதல்வரும், தற்போது கொழும்பில் எம். ஏ. இல் போட்மனாய்இருப்பவருமான எஸ். அந்தோனிப்பிள்ளையின் செல்வப்புதல்வரான ஏ. அல்விஸ் (யோகராசா) அன்று எங்கள்எல்லவரையும் அந்தரிக்கவிட்டு ஐந்து திருக்காயத்தோன் அரவணைப்பில் சென்றுவிட்டார். இதைக் கண்ணுறும் யாவரும், அவரைத் தேவன் அர்ச். பாலியர்கள்கூட்டத்தில் சேர்க்கும்படி தங்கள்செபத்தில் நினைவுகூரும்படி தயவாகக் கேட்கிறோம்.

ஞானத்தாய், தகப்பன்: ரி. தம்பிக்கண்—புஷ்பம்.

தகப்பன், தாய்: எஸ். அந்தோனிப்பிள்ளை—பவுல்அம்மா.

சகோதரர்: ஏ. அல்வீன், ஏ. காணிக்கைஅம்மா, ஏ. சிறியபுஷ்பம், ஏ. ஞானசியன், ஏ. சலமோன்.

பேர்த்தியார்: சலமோன்பெண் அன்னம்மா.

சிறியதகப்பன், தாய்: எஸ். பேதுருப்பிள்ளை—செல்லம்மா, எஸ். நீக்கிலாப்பிள்ளை—அல்வீன்அம்மா, எஸ். சூசைப்பிள்ளை.

பேரன்: கே. யோசேப் யோட்கிழப்சிறுயங்.

மச்சாள்: எஸ். சவிரிஅம்மா.


## விற்பனைக்கு இருக்கின்றன

கத்தோலிக்கு கீர்த்தனைமாலை
PART 1.
லத்தீன் கீர்த்தனைகள்
பிரதிவிலை 2 ரூபா 25 சதம்

❊ ❊ ❊

யேசுநாதரின் சுவிசேஷம்
அல்லது
நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை
Harmony of the Four Gospels
புதிதாக வெளிவந்திருக்கும் ஓர் அருமையான நூல்
பிரதிவிலை 2 ரூபா 95 சதம்

❊ ❊ ❊

பூசை உதவிமந்திரம்—பிரதிவிலை சதம் 40

❊ ❊ ❊

செபச்செண்டு—பிரதிவிலை ரூபா 1

❊ ❊ ❊

திவ்விய பூசையின் சாதாரண செபங்கள்—பிரதிவிலை சதம் 60

எல்லாவற்றிற்கும் தபாற்செலவு பிரத்தியேகம்

கிடைக்கும் இடம்:

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்.


## அடுத்த ஜனாதிபதி யார்?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யூனிஸ்த உளவுகாரரால் நாடு முழுவதும் கதிகலங்கியிருந்தது. எனவே, இருதிறத்தாருக்கும் பொதுவாக நடுநிலைமை வகிப்பது எளிதன்று. உலகப்போக்கை நன்குணர்ந்த ட்றூமன் அமெரிக்கஉள்நாட்டில் நீக்ரோக்களுக்கு உண்மையிலேயே சமத்துவமளிக்க வேண்டுமென்று பிடிவாதம்பண்ணினர். இதனால் ஜனநாயகக்கட்சியின் வல்லரணான தென்பிரதேசங்கள் ட்றூமனை எதிர்த்தன. எனவே, தீர்க்கபுத்தியும், தீரமானமனதும் படைத்தவர் ட்றூமன். தனிவாழ்வில் சிறந்த கிறீஸ்தவர். குடும்பபற்றுள்ளவர். தாய். தர்மபத்தினி, தனயைஎன்பவர்களிடம் அதிக வாஞ்சையுள்ளவர். அமெரிக்க அரசியலமைப்புப் பிரகாரம் ஜனாதிபதிக்கும், சட்டசபைக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்படுவது சகசம். ஆனால், ட்றூமன் மீண்டும் பதவிக்குப் போட்டியில் இறங்கியிருந்தால் குடியரசுக்கட்சிக்கு வெற்றிகிடைக்குமென்று யாரும் உறுதியளிக்க முடியாது.

ஈசனேவர்

இதற்கெனவே சில குடியரசுக்கட்சித் தலைவர்கள் தளகர்த்தர் ஈசனேவரை அணுகித் தமது கட்சியின்பெயரால் ஜனாதிபதித் தேர்தலில் அபேட்சகராய்நிற்கும்படி அவரைக்கேட்டுக் கொண்டனர். இரண்டாவதுஉலகயுத்தத்தில் வாகைசூடியவீரர் இவர். சேர்ச்சிலின்மதிப்புக்குப் பாத்திரமானவர். ஓராண்டுக்குள் ஐரோப்பியஐக்கியத்தை உருவாக்கி அதற்கென ஒருபடையையும் திரட்டித்தந்த இராஜதந்திரி — இத்தகையஒருவருக்கு அரசியற்பதவியில் ஆசைவந்தது ஆச்சரியமுமன்று. தவறுமன்று. ட்றூமன் தாம்அபேட்சகராக நிற்பதில்லையென்று அறிவித்ததன்பயனாக ஜனநாயகக் கட்சித்தலைவர்கள்பலர் ஆரவாரத்துடன் தேர்தலில் இறங்கப்பார்க்கின்றனர். குடியரசுக் கட்சியில் ஈசனேவருக்கு மகத்தானஎதிர்ப்பாளர் ராவ்ற்(Taft) என்று தோன்றுகிறது. இவர் அரசியல் அநுபவமுள்ளவர், ஈசனேவர் இராணுவப்பழக்கமன்றி அரசியல்விவேகம் உள்ளவரென்று இதுவரை எண்பிக்க வசதியிருந்ததில்லை. அமெரிக்க ஜனாதிபதியே அமெரிக்க ஆட்சியின் உயிர்நாடிஎன்பது மீண்டும்மீண்டும் சரித்திரம் வற்புறுத்தும் உண்மை

## Government Tenders

MANNAR KACHCHERI

Tenders are hereby invited for the purchase of the exclusive privilege of selling toddy by retail in the Toddy Taverns in the Mannar District during the period 1-7-52 to 30-6-53. Tenders should reach the A. G. A. not later than 9 a. m. on 6-6-52.

For particulars see Part I—Section II, Govt. Gazette, 23-5-52, copies of which are available for perusal at all Post Offices.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 29-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org